# ஜகன்மோகினி

ஆசிரியை
வை. மு. கோதைநாயகி அம்மாள்



## மாயப்ரபஞ்சம்

(தொடர்ச்சி)

10. வருந்திடும் உயிர்கள்—பிரிந்திடும் பறவை
11. இழந்த நெஞ்சம்—உடைந்த இதயம்
12. அரவத்தின் விஷம் அம்ருதமாகுமா?
13. நாற்றக் குப்பையும், நயவஞ்சகச் சூழ்ச்சியும்
14. ஆனந்த செய்தி—ஆச்சரிய சம்பவம்

---


நீங்கள் இன்னும் படிக்கவில்லையா?

சமீபத்தில் வெளிவந்த நாவல்கள்

| | |
|---|---|
| அன்பின் சிகரம் | அணா 4 |
| ஸரஸ ராஜன் (2-ம் பதிப்பு) | ,, 4 |
| சுகுண பூஷணம் (2-ம் பதிப்பு) | ,, 4 |
| அம்ருததாரா (2-ம் பதிப்பு) | ,, 4 |
| ஜய ஸஞ்சீவி (3-ம் பதிப்பு) | ,, 4 |
| ப்ரேமப்ரபா | ,, 8 |
| மந்தாகினி | ,, 8 |
| அநாதைப் பெண் | ரூ. 1/4 |


மாயப்ரபஞ்சம்

அணா 2


3 - DEC 1937

1042

JL
ஊ211,N22JM
N37·14·7
183006

1849

வஞ்சப் பேயின் நடனம்
அதிகார தேவதையின் ஆட்சி
பொறாமையின் புகழ்ச்சி
உண்மைக்காதலின் உயரிய காட்சி
வீர வனிதையின் விசித்திர மாட்சி
வஞ்சகர்கள் வலை வீசும் சூழ்ச்சி
தீயவர்களின் திடுக்கிடும் வீழ்ச்சி
ப்ரமிக்கச் செய்திடும்
படுகொலையின் மர்மம்
மனத்தை யுருக்கிக்
கண்ணீரைப் பெருக்கச்
செய்யும் பலவித
சம்பவங்களும்
நிறைந்த

# அனாதைப் பெண் —விலை ரூ. 1—4—0

அழகிய சித்திரப்
படங்களுடன்
நான் கீழ்க்கண்ட
விலாசத்தில்
இருக்கிறேன்.

அன்பர்களே! தயவு செய்து
உங்களது ஆதரவை அளித்து,
அனாதைப் பெண்ணாகிய
என்னை அழைத்துச் செல்லுங்கள்

(சந்தா நேயர்களுக்கு
விலை ரூ. 1.)

"ஜகன்மோகினி ஆபீஸ்"
26, தோடித் தெரு
திருவல்லிக்கேணி, சென்னை

3 - DEC 1937

ஸ்ரீ:

# ஜகன்மோகினி

ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு

—திருவள்ளுவர்.

ஜகன்மோ கினியென்னுஞ் சஞ்சிகையைக் காக்க
ஜகன்மோ கினி ! மனத்தைச் சார்ந்து

—ஸ்ரீ வீரராகவ கவி.



| | | |
|---|---|---|
| மலர் 14 | ஈச்வர ஹூ ஆனி மீ JULY 1937. | இதழ் 7 |



## திருமால் வணக்கம்

பாற்கடலிற் பள்ளிகொளும் பரமன் கண்டாய்
பனிப்பகைஞன் குலத்துதித்த பண்போன் கண்டாய்
மாற்கடஞ்சூழ் வனத்துறைந்த மாயோன் கண்டாய்
வளம்பெறு நீர்கடலடைத்த வள்ளல் கண்டாய்
ஏற்கும் அடியாருளத்தில் இருப்போன் கண்டாய்
நாற்கடல்சூழ் புவியினொடு விண்ணும் நாளும்
நலமுறும் அல்லிக்கேணி நகரான் தானே!

—ஸ்ரீ வீரராகவகவி

ராகம்—சாவேரி

மலர் மங்கை யுறையும் மணிப[illegible]
மனத்துறையைத் தீராய், கண் பாராய் (ம)

அலகில் வினைகளை நான்
பலவிதம் செய்துள்ளம்
கலங்குகின்றேன் கதி
இலையுன்னை யன்றி (ம)

வகையறியாமல் திகைத்திடும் ஏழைக்குன்
நகை முகங்காட்டி என்னகத்துயர் போக்கிட
ககவாகனனே! பகைவன்போல் பார்த்திடல்
தகுமோ உனக்கிது பகர்வாயே திரு. (ம)

வை. மு. கோ.

183006.
சென்னை-600 008

# ராஷ்டிரபதியின் திக்விஜயம்

## மலேயாவில் நேருஜி

மே மாதம் 23ந்தேதி காலை 8-மணிக்கு ராஷ்டிரபதி ஸ்ரீ ஜவஹர்லால் நேரு, தமது புதல்வி இந்திரா நேருவுடன் "காரோ" என்னும் கப்பலில் பினாங்கு வந்திறங்கினர். பல்லாயிரக் கணக்கான மக்கள் காங்கிரஸ் மகா சபைத் தலைவரைத் தரிசிக்க அதிகாலை முதற்கொண்டே துறைமுகத்தில் காத்துக்கொண்டிருந்தனர். ராஷ்டிரபதியைக் கண்டதும் அவர்களுடைய உற்சாகம் கரைபுரண்டோடியது. ஜே கோஷங்கள் வானைப் பிளந்தன. தலைவருக்கும் குமாரி இந்திராவுக்கும் மாலைகள் சூட்டி வரவேற்றனர். ஊர்வலமாக அழைத்துச் செல்லுகையில், வழி நெடுக ஜனங்கள் திரளாக நின்று காட்டிய உற்சாகம் கூறத்தரமன்று.

### பேட்டியும்—பதிலும்

மோல்மீனுக்குச் சென்றிருந்த பொழுது ஊ—டேன்—வின் கேட்ட கேள்வியின் ஒரு பகுதிக்கு ஜவஹர் கூறிய பதிலைக் கீழே காண்க:

### அரசியல் நிராகரிப்பு-பதவி ஏற்பு

*கே:—சீர்திருத்தத்தை நிராகரிக்க வேண்டும் என்பதும், உத்தியோகங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதும், தங்களுடைய கருத்தில் முன்னுக்குப் பின் முரணாகத் தோன்றவில்லையா?*

ப:—அவைகள் முரணாய்த் தானிருக்கின்றன. ஆனால் அடிப்படையான முரண் அந்தச் சட்டத்திலேயே அமைந்திருக்கிறது. அந்தச் சட்டம் பொறுப்பு வழங்குவதைப் பற்றிப்பேசுகிறது. ஆனால், வழங்கவில்லை. ஆதலால் அச்சட்டத்தை அழிப்பதற்குக் காங்கிரஸ் சட்ட சபைகளில் நுழைகின்றது. அதை அமுலுக்குக் கொண்டு வருவதற்குக் காங்கிரஸ் நுழையவில்லை. ஒத்து வேலை செய்யாமல், எவ்வளவுவரை முடியுமோ அவ்வளவு புரட்சிகரமான மாறுதல்களை உண்டாக்குவதற்கு ஒரு மனிதன் சொல்லளவில் உத்தியோகம் ஏற்கலாம்.

* * * *

பினாங்கில் மே 23ந்தேதி மாலை 4-மணிக்குக் கூடிய பத்திரிகை நிருபர்களுக்கு அளித்த பேட்டியில், ராஷ்டிரபதி கூறியது இது.

### பிரஜா உரிமை

"என்னை வரவேற்க ஏராளமான ஜனங்கள் வந்ததைக் கண்டு சந்தோஷிக்கிறேன். ஆனால், இம்மாதிரியான கூட்டங்கள் எனக்கு சகஜமானது.

வசிப்பதற்கு பினாங்கு அருமையான இடம்.

இந்தியர் குடியேற்றப் பிரச்னையைப் பற்றி எனக்கு அதிகம் தெரியாததால் அதைப்பற்றி ஏதுவும் கூற விரும்பவில்லை. வேலையில்லாத் திண்டாட்டம் காரணமாக இந்தியர்கள் இங்கு வந்து சேர்வது இயல்பே. ஆனால், இந்நாட்டு மக்களின் உரிமை

களுக்கு முதல் ஸ்தானம் கொடுக்கப்பட வேண்டியது நியாயம். இதர இடங்களிலும் ஜனங்களுடைய நலனை சர்க்கார் கவனிக்கின்றனர்; ஆனால் உத்தியோக விஷயத்தில் அந்த ஜனங்களுக்கே எல்லாம் கொடுக்கப்படுவதில்லை.

மலேயாவில் ஜனித்த ஒவ்வொருவருக்கும் இந்நாட்டின் பிரஜா உரிமை உண்டென்பதை அழுத்தமாகக் கூறுகிறேன்.

* * * *

ஈபோவில் ராஷ்டிரபதி ஜவஹரைப் "பிரீ பிரஸ்" நிருபர் பேட்டிக் கண்டார். "பிரிட்டிஷாருக்கு விரோதமான கொள்கையுடையவர்" என்று தன்னைக் குறிப்பிடுவதை அவர் பலமாக ஆட்சேபித்தார்.

"நான் இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சிக்கு விரோதமானவன்; ஏனெனில் இந்தியாவில் இந்தியர்களின் சர்க்கார் இருக்கவேண்டுமென நான் விரும்புகிறேன். பிரிட்டிஷ் ஜனங்களுக்கு விரோதமானவன் என்பது அதன் பொருளல்ல. இங்கிலீஷ் பிரெஞ்சு, ஜப்பான் முதலிய ஏகாதிபத்தியத்திற்கு நான் விரோதமாக இருப்பது போலவே, பிரிட்டிஷ் ஏகாதிபத்திய சர்க்காருக்கும் நான் விரோதமாக இருக்கிறேன்" என்று ஸ்ரீ ஜவஹர் கூறினார்.

* * * *

சிங்கப்பூரில் வெளியிடப்படும் "ரிபாம்" என்னும் ஆங்கில பத்திரிகையின் நிருபர் பேட்டி கண்டபோது, மத ஸ்தாபனங்களைப் பற்றிக் கீழ்க்கண்டவாறு ஜவஹர் கூறினார்.

கேள்வி:— புரோகிதர்களும் அர்ச்சகர்களுமே உண்மையாக பாமர மக்களைக் கொள்ளை கொள்ளும் கொள்ளைக் கூட்டமெனச் சொல்லலாகாதா?

பதில்:—ஸ்தாபிக்கப்பட்டுள்ள எல்லா மதஸ்தாபனங்களும் மக்களைச் சுரண்டும் சுபாவம் பொருந்தியதாகவேயிருக்கின்றன; சில விஷயங்களில் கொள்ளையிடுவதாகவுமிருக்கின்றன. ஏனென்றால், தன் ஆதிக்கத்தை நிலைநாட்டிக் கொள்ளவும், தான் நீடித்து நிற்கவும் குருட்டுக் கொள்கைகளை ஆதாரமாகக் கொண்டு மதஸ்தாபனங்கள் ஆதிக்கம்பெற்று வருகிறதென்றே நான் நம்புகிறேன். மற்றோர்புறம் மதம் மக்களுக்கு உயர்ந்த தத்துவத்தையும் நன்னடத்தையையும் போதிப்பதற்கு ஏற்பட்டது என்றும் புலப்படுகிறது. ஸ்தாபிக்கப்பட்ட மதங்களின் புரோகிதத்தினால் இந்திய நாட்டில் மக்கள் மிகமிக அதிகமான கொள்ளைக் காளாகிறார்கள் என்பதை நான் சந்தேக மற ஒப்புக் கொள்ளுகிறேன். 2,500 ஆண்டுகளுக்கு முன் தோன்றிய புத்தர் புரோகித கொள்ளைக் கெதிராகத் தனது வெற்றிகரமான கூச்சலைக் கிளப்பினார்.

* * * *

மலேயா "டிரிபியூன்" பத்திரிகை நிருபருக்கு அளித்த பேட்டியில் பண்டிதர் பிரிட்டிஷ் அரசியல் போக்கைப்பற்றித் தெரிவித்ததன் சாரம் வருமாறு:—

### "தலைகனத்த அரசாங்கம்"

"சர்க்கார் ஒரு சட்டத்தைச் செய்யலாம். ஆனால் ஜனங்கள் அதை விரும்பாவிட்டால், அது வேலை செய்ய முடியாது. இந்தியாவின் வறுமையைப் பிரிட்டிஷ் அரசாங்கம் விரும்பவில்லை. எந்த அரசாங்கமும் வறுமையை விரும்பாது. பிரிட்டிஷ் அரசாங்கம் இந்தியாவின் வறுமையை விரும்பவில்லையாயினும் அதைத் தடுக்கக் கூடவில்லை. அதனுடைய அரசியல் கட்டிடம் தலைகனத்தது. தேசத்திற்குப் பெரும் செலவைத் தருவது. உலகத்தில் இந்தியா ஒரு வறுமை நாடாயினும் அது பெருஞ் சம்பளங்களைக் கொடுக்கிறது. வியாபாரக் கொள்ளை அதிகம். நிலங்களின் முறை பழங்காலத்தது. இந்

தியாவிற்கு இது ஒரு பெரும் பிரச்னை. தற்காலப் போக்கிற்கு ஒத்துவராத முறைகள் பெரும்பாகமா யிருக்கின்றன. பிரிட்டிஷ் ஆட்சியின் நூறு வருடத்திய பலாபலன்களின் அம்சங்கள் இவை. இது பிரிட்டிஷ் கவர்மெண்டின் வேலை.

லண்டனிலுள்ள முதலாளிகளுக்குப் பண உதவி அளிப்பவர்களும் லாபந் தரும்படி இந்தியாவின் செல்வமெல்லாம் பெரும் பகுதியாய்ச் சுரண்டப்படும் அஸ்திவாரத்தில் பிரிட்டிஷ் ஆட்சி நிர்மாணிக்கப் பட்டிருப்பதைத்தான் நாங்கள் குற்றஞ் சொல்கிறேம்.

இந்திய மக்களின் நன்மைகள் முதலாவதாகக் கவனிக்கப்படவில்லை. அதனால் அரசாங்கம் அதிக ஜனநாயகத் தன்மை யுடையதா யிருக்கவேண்டுமென நாங்கள் விரும்புகிறேம்."

* * * *

சில சீன பத்திரிகை நிருபர்கள் "ஹிந்தி என் தேசபாஷையாக இருக்க வேண்டும்" என்றதற்கு ஜவஹர் அளித்த பதில் இது.

ஹிந்தியின் உயர்வு

"திராவிட பாஷைகளில் 40 சதவிகிதம் சமஸ்கிருத கலப்பு இருக்கிறது. இந்தியாவில் உள்ள 36 கோடி ஜனத் தொகையில் தற்பொழுது 12 கோடி மக்களால் ஹிந்தி பேசப்படுகிறது. 8 கோடி மக்கள் ஹிந்தியை அறிந்து கொள்கின்றனர். ஆகவே மொத்தத்தில் 20 கோடி இந்தியர்கள் ஹிந்தியை அறிந்தவர்களாவர். இந்தியாவின் பல் வேறு பாகங்களில் உள்ள மக்கள் ஒருவருக்கொருவர் சுலபமாக அறிந்துகொள்ளும் பொருட்டே ஹிந்தியை இந்தியாவின் தேச பாஷையாக இருக்கவேண்டுமெனக் கூறுகிறேம். இதனல், தமிழ், தெலுங்கு போன்ற உயர்ந்த பாஷைகளைப் பராதீனப்படுத்துவ தென்பது எங்கள் நோக்கமேயல்ல.

மேலும் இந்திய தேசியக் காங்கிரஸ் கூட்டங்களில் ஆங்கிலம் கூட உபயோகப்படுத்தப்பட்டு வந்தபோதிலும், பெரும்பாலும் ஹிந்தியே உபயோகப் படுத்தப்பட்டு வருகிறது. ஆங்கில பாஷையும் இந்தியாவில் பரவி வருகிறது. என் சம்பந்தப்பட்டவரையில், ஆங்கில பாஷைக்கு நான் விரோதியல்ல; வெளி உலகத்துடன் சம்பந்தம் வைத்துக்கொள்வதற்கு ஆங்கிலமும் வேண்டியதுதான்; ஆனல் உலகத்தின் எல்லா தேசங்களுடனும் சுலபமாக சம்பந்தம் வைத்துக்கொள்வதற்குப் பிரெஞ்சு, ஸ்பானிஷ், ஜெர்மன் போன்ற பிறபாஷைகளும் கற்க வேண்டுமென்றே நான் கூறுவேன்."

* * * *

பிணங்கிலிருந்து ஜூன் மீ 5ந் தேதி ராஷ்டிரபதி இந்தியாவிற்குத் திரும்புவதற்குமுன், தன் நன்றியையும் விடைபெறுதலையும் எங்ஙனம் தெரிவித்தாரென்பதைக் கீழே காணலாம்.

"போய் வருகிறேன்"

"நான் இங்கு மிகவும் களைப்புடன் வந்தேன். போர்ட்டிக்ஸனில் ஒரு சில நாட்கள் தங்கி யிருந்ததைத் தவிர மற்றப்படி எங்களுக்கு ஒழிவேயில்லை.

ஆனல், இத் தேசமும் இங்குள்ள பெருந் தன்மையுள்ள உபசரிக்கும் உயர்ந்த குணமுள்ள ஜனங்களும் என் களைப்பைத் தீர்த்து, ஆசுவாச மேற்படும்படி செய்து அதிக மனோபலத்துடனும், உற்சாக மூட்டும் ஞாபகங்களுடனும், உடல் நல அபிவிருத்தியுடனும் திரும்பிச் செல்லும்படி செய்திருக்கிருர்கள்.

பிரயாணமானது வெகு காலம் வரை என் ஞாபகத்திலிருந்துவரும்; எதிர்காலத்தில் இந்த ஞாபகமானது எனக்கு உற்சாகத்தையும் அளித்து வரும்.

எனவே மலாய் நாட்டிடம் விடை பெற்றுக்கொள்கிறேன். போய்வருகிறேன்."

—"சுதேச அபிமானி திரட்டியது"

# அயல் நாட்டுச் செய்திகள்

## இந்தியா மந்திரியின் விளக்கம்

ஜூன் மாதம் 8ந்தேதியன்று பார்லிமெண்டில் பிரபுக்கள் சபையில், லார்டு ஜெட்லண்டு புதிய அரசியலைப்பற்றித் தெரிவித்ததாவது :—

"மாகாண ஆட்சி சம்பந்தப்பட்ட வரை புதிய அரசியலின் முக்கியமான அம்சம் யாதெனில், ஆட்சிப் பொறுப்பு பிரிட்டிஷ் பார்லிமெண்டிட மிருந்து இந்தியாவிலேயே உள்ள, ஜனங்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்ட சபைகளுக்கு மாற்றப்படுவதேயாகும். 1935-ம் வருஷத்திய சட்டப்படி பார்லிமெண்டு நன்றாக யோசித்தே தன்னிடமிருந்த இப்பொறுப்பை இந்தியச் சட்ட சபைகளுக்கு மாற்றியது. ஆக்ஞாபத்திரங்களில் சில குறிப்பிட்ட சந்தர்ப்பங்களைத் தவிர மற்றெப்பொழுதும் தங்களுடைய மந்திரிகளின் ஆலோசனைப்படியே நடக்குமாறு கவர்னர்களுக்குத் திட்டமாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அந்த மந்திரிகள் பார்லிமெண்டுக்கோ, பிரிட்டனுக்கோ ஜவாப்தாரிகளல்ல. இந்திய சட்டசபைகளுக்கே ஜவாப்தாரிகளாவார். மாகாண அரசாங்கங்களின் நிர்வாகக் கொள்கையை எதிர்ப்பதற்கான உரிமை இந்திய சட்டசபைகளுக்கே உண்டு. அங்ஙனமேஅச்சபைகளுக்குத்தான் இந்திய மந்திரிகள் ஜவாப்தாரிகளாவர்."

* * * *

### மகுடாபிஷேகத்தைப்பற்றி பேர்னர்டுஷா

"மிஸ்டர் ஜார்ஜ் பெர்னர்டுஷா ஆறாவது ஜார்ஜின் மகுடாபிஷேகத்தைப் பற்றி "டைம் அண்டு டைட்" பத்திரிகையில் எழுதியுள்ள ஒரு கட்டுரையின் சாரமாவது:—

மகுடாபிஷேக சம்பந்தமான சின்னங்கள் எந்த நிலைமையைக் குறிக்கின்றனவோ அதற்கு நேர் மாறான நிலைமையே தற்போது இருந்து வருகிறது. மன்னருக்கு எந்த அதிகாரங்கள் அளிப்பதைக்காட்ட அச்சின்னங்கள் உபயோகப்படுகின்றனவோ, அந்த அதிகாரங்கள் இப்பொழுது அவருக்குக் கிடையாது. எட்டாவது எட்வர்ட் முடி துறந்ததற்கு இந்தக் கர்ணடகமான சிறிதும் அர்த்தமற்ற, கேலித் கூத்தாயுள்ள சடங்குகளுக் குட்பட அவர் மறுத்ததுதான் காரணமே யன்றி, ஒரு அமெரிக்க ஸ்திரீயை விவாகம் செய்து கொள்ள முன் வந்ததல்லவென எனக்குத் தெரிய வருமாயின், நான் ஆச்சரியப்பட மாட்டேன்."

* * * *

### லண்டனில் ஹிந்துக் கோவில்

"ஐரோப்பாவிலுள்ள ஹிந்துச் சங்கத் திறுதாவில், சமீபத்தில் காக்ஸ்டன் மண்டபத்தில் ஸர். ஏ. ராமசாமி முதலியாருக்கும், ஸர். எஸ். ராதா கிருஷ்ணனுக்கும் ஒரு தேக் கச்சேரி நடத்தி வைக்கப்பட்டது.

அச்சங்கம் லண்டனில் தனக்கென ஒரு நிரந்தர வாசஸ்தலமும் ஒரு ஹிந்துக் கோயிலும் நிர்மாணிக்க முயன்று வருவதாகவும், அம்முயற்சிசீக்கிரத்தில் ஈடேறுமெனத் தாம் நம்புவதாகவும் ஸர். ராமசாமி முதலியார் தெரிவித்தார்".

* * * *

## லண்டனில் புதிய மசூதி

"மேற்கு கென்ஸிங்டனில் நிர் மாணிக்கப்படவிருக்கும் பெரிய மசூதி யின் அஸ்திவாரக்கல் இங்கு நாட்டப் பட்டது. இவ் விழாவுக்குப்பல நாடுகளை யும் அநேக மதங்களையும் சேர்ந்த பிர முகர்கள் விஜயம் செய்திருந்தனர்.

இம்மசூதி இந்தியாவிலுள்ள தாஜ் மஹாலைப் போல் நிர்மாணிக்கப்படும். இதற்கு ஒரு லட்சம் பவுன் செல வாகுமென மதிப்பிடப்பட்டிருக்கிறது. ஹைதராபாத் நிஜாம் ஏற்கனவே இதற்கு 60,000 பவுன் நன்கொடை யாக அளித்துள்ளார். 28,000 பவு னுக்கு மனை வாங்கப்பட்டது.

* * *

## நேருவுக்கு இர்வின் புகழுரை

ஒய்.எம். ஸி. ஏக்களின் உலக ஐக்கி யச் சங்கத் தலைவரான டாக்டர். மாட், நேருஜியைப் பற்றிக் கூறுவதைக் கீழே கண்டு, களியுங்கள்.

"உலகத் தலைவர்கள் எத்தனையோ பேர்களின் சரித்திரங்களை நான் வா சித்திருக்கிறேன். தங்களை மறந்து பெரிய இயக்கங்களில் ஈடுபட்டு, சர்வ பரித்தியாகம் புரிபவர்களே மகான் கள் என்பதை மேற்படி சரித்திரங்கள் மூலம் நான் அறிந்திருக்கிறேன். இந் தியா இத்தகைய தன்னலமற்ற தியாகி களுக்கு உற்பத்தி ஸ்தானமாக இருந்து வருகிறது. நான் சீமையி லிருந்து இந்தியாவிற்குப் புறப்படுகை யில், பண்டித ஜவஹர்லால் நேரு வின் சுய சரிதத்தை வாசிக்க மாறு ஹாலிபாக்ஸ் பிரபு (இர்வின்) என்னி டம் சொன்னார். அப்படியே நான் அதைப் படித்தேன். அதற்குப் பிறகு ஏற்கனவே நான் அந்த உத்தம புரு ஷர்பால் கொண்டிருந்த மதிப்பும் மரி யாதையும் பன் மடங்கு அதிகரித்தன. இந்தச் சுய சரித்திரத்தை யாவரும் வாசித்து உண்மையான உள்ளக் கிளர்ச்சியில் ஆழ வேண்டு மென்பதே எனது அவா."

## ராக்பெல்லரின் ஆடம்பா மற்ற வாழ்க்கை

"நல்ல மதப்பற்றுக் கொண்ட ராக் பெல்லர் ஒரு தடவை கூட சாராயம் குடித்ததில்லை; புகையிலை உபயோகித் ததும் கிடையாது. "பாஷன்" அல்லது "நவநாகரீக" மோகமே அறியாதவர். ராக்பெல்லர், தியேட்டருக்கே போனதில்லை; சங்கீதக் கச்சேரிகளில் அவருக்குப் பிடித்தம் கிடையாது. அவரது வீட்டில் விலையுயர்ந்த படங் களோ அல்லது மரச் சாமான்களோ அல்லது இதர வஸ்துக்களோ இடம் பெறவேயில்லை. ராக்பெல்லர் வாழ்க் கையின் பிரதானமான அம்சம் யாதெ னில், அவரது அரிய புத்தி கூர்மையும் அபார வியாபாரத் திறமையும்தான்."

* * *

## அமெரிக்காவிலும் பால்ய விவாகம்

"டென்னஸியின் வட பாகத்தி லுள்ள ஒரு ஊரில் 9 வயதான யுனிஸ் வின்ஸ்டட் என்ற சிறுமியும், 22 வய தான சார்லி ஜான்ஸ் என்ற வாலிப னும் விவாகம் செய்து கொண்டு தனி யாகக் குடும்ப வாழ்க்கை நடத்தி வரு கின்றனர்."

* * *

## முஸோலினிக்கு ஹிட்லர் பட்டம்

"ஹெர் ஹிட்லர் ஸீனர் முஸோலினிக்கும், இத்தாலிய அந்நிய விவகார மந்திரியான ஸீனர் ஸியானோவுக்கும், "கிராண்ட் கிராஸ் ஆர்டர்" என்ற உயரிய பட்டத்தை வழங்கியிருக் கிறார்."

## எளிய காதலர்களுக்கு விண்ட்ஸரின் நன்கொடை

"இரு போலிஷ் காதலர்கள் சுக வாழ்வு வாழ்வதற்கு உதவ வின்ஸர்

கோமகன் 100 பவுன் செக் அனுப்பியுள்ளார்.

டாக்டர் நார்பெட் என்னும் வியன்னு சர்வ கலாசாலை மாணவர் ஸ்டாயின் லாவ் என்னும் ஊர் மாது ஒருவரைக் காதலித்தார். ஆனுல், மணம் முடிக்கப் பணம் இல்லை. 10 நாளுக்கு முன் அவர்கள் விண்ட்ஸர் கோமகனுக்கு அனுப்பியுள்ள பாராட்டுக் கடிதத்தில் தங்கள் காதல் விஷயத்தைப் பற்றிக் குறிப்பிட்டுத் தங்கள் ஏழ்மைத் தனத்தைப் பற்றியும் குறிப்பிட்டிருந்தனர். உடனே 100 பவுன் செக் வந்தது அவர்களுக்கு ஆச்சரியத்தை அளித்தது."

"மின் வேட்டு"

# இந்தியச் செய்திகள்

## அரசியல் தியாகிகள் மகாநாடு

சாப்ராவில் அநுக்கிரஹ நாராயண சின்ஹா தலைமையில் கூடிய மகாநாட்டில் ராஜன் பாபு பின்வருமாறு கூறினுர்.

"நான் சொல்லப்போகும் விஷயங்களிற் சில கசப்பாக விருக்கலாம். ஆனுல், அவற்றை நான் சொல்லியே ஆகவேண்டும். சென்ற சட்டசபைத் தேர்தல் காலத்தில் தாங்கள் செய்த காரியங்களை ஜாபிதாவாக எழுதி அவற்றிற்குப் பதிலாகத் தங்களுக்குச் சட்டசபையில் ஸ்தானம் வேண்டுமென்று கோரிப் பலர் கடிதம் எழுதினுர்கள். இந்த மனப்பான்மையைக் கண்டிக்க வார்த்தைகள் போதா; நாம் பலனை எதிர்பார்த்துக் காரியம் செய்தால், ஆபத்துத்தான் நேரும். காங்கிரஸில் சேர்ந்து சேவை செய்தல்தான் நியாயம். சேவை செய்வற்குக் கிடைக்கும் சந்தர்ப்பமே அதற்கு ஊதியம் என்ற கருத்தே நமக்குள்ளிருக்க வேண்டும். சொத்தில் பேராசையைப் போக்கவேண்டும். சென்ற சட்டமறுப் பியக்க காலத்தில், தங்கள் சொத்து, பாதிக்கப்படவே பலர் தளர்ந்துபோய் விட்டார்கள். இத்தகைய குறைகளைப் போக்கி நம் ஸ்தாபனத்தை நாம் பரிசுத்தமானதாக்கிக் கொள்ளவேண்டும். இன்று மந்திரியாகவிருக்கும் ஒரு காங்கிரஸ்காரர் நாளை அதைவிட்டுத் தோட்டியாகும்படி கேட்டுக்கொள்ளப்படலாம். தோட்டி வேலை செய்யுமொருவர் மந்திரியாக்கப் படலாம். இரண்டிலும் பேதமில்லாமல், சேவை செய்து முன்னேறினுல், சுதந்திர யுத்தத்தில் நாம் ஜயித்தவர்களாவோம்."

* * *

"கதர் நம் தேசீய உடை"

"பண்டித ஜவஹர்லால் நேரு ரங்கூனிலுள்ள அகில இந்திய நூல் நூற்போர் சங்கத்தைச் சேர்ந்த காதி பந்தருக்கு வந்திருந்தபோது அதற்கு அடியிற்கண்ட செய்தியை விடுத்துப் போனுர் —

"கதர் நம் தேசீய உடையாகும். பர்மாவில் வசிக்கும் நமது இந்திய சகோதர சகோதரிகள் நம் தாய் நாட்டிற்காக என்ன செய்கின்றனர்? அவர்கள் நமது சுய ராஜ்யப் போராட்டத்திற்கு எத்தகைய உதவி செய்கின்றனர்? அவர்கள் பர்மாவி லிருந்து கொண்டுகூட பெரும் உதவி செய்யக் கூடும். ஆனுல், ஒவ்வொருவரும் கதர் அணிவதைத் தங்களது கடமையாகக் கருதவேண்டும். நமது தேசீய சின்னமான கதர் எங்கு மிருக்கவேண்டும்."

* * *

**"காங்கிரஸ் பதவியேற்க வேண்டும்"**

காந்திஜி "டைம்ஸ் ஆப் இந்தியா" நிருபரிடம் அறிவித்ததாவது:—

"காங்கிரஸ்காரர்கள் மந்திரி பதவி யேற்கவேண்டுமென நான் மிகுந்த ஆவல் கொண்டிருக்கிறேன். ஆனால், காங்கிரஸைச்சமரஸப்படுத்தத் தாங்கள் தயாரெனக் கவர்ன்மெண்டார் காட்டினால்தான் அது சாத்தியமாகும். மந்திரிகளை நீக்குவது தவிர, மற்ற எல்லா விஷயங்களிலும் லார்டு ஜெட்லண்டு விட்டுக் கொடுத்து விட்டதாகக் கூறப்படுவது உண்மையாயின், இன்னும் சிறிது முன் வந்து ஏன் சமரஸப்படுத்தக் கூடாதெனக் காங்கிரஸ் கவர்ன்மெண்டைக் கேட்கிறது. காங்கிரஸ் இதுவரையில் சமரஸ முறையிலேயே நடந்துகொண்டிருக்கிறது."

* * *

**வகுப்பு வாதம் ஒழிய வழி**

"வரப்போகும் கராச்சி கார்ப்பொரேஷன் தேர்தலைக் கலப்புத் தொகுதிகள் மூலம் நடத்தவேண்டுமென்று சிபார்சு செய்யும் தீர்மானத்தைக் கார்ப்பொரேஷனில் கொண்டு வரப்போவதாக, ஹக்கீம் பதே முகமது சேவானி நோட்டீஸ் கொடுத்திருக்கிறார். இதர ஸ்தல ஸ்தாபனங்களிலும் இத்தகைய தீர்மானஞ் செய்யப்படும். சிந்திலிருந்து வகுப்புவாதப் பேயைத் துரத்துவதற்கு இது தான் வழியாகும்."

* * *

**தொண்டு கிழத்தின் தீரம்**

"யூ ஙின் என்ற 75 வயதுக் கிழவர் டாவாக் கருகில் வயலை உழுது கொண்டிருக்கையில், நாய்கள் குலைப்பதைக் கேட்டு, அதன் காரணம் யாதெனப் பார்க்க நாய்களிருக்கும் திசைநோக்கிச் செல்லுகையில், ஒரு சிறுத்தைப் புலி அவர் மீது பாய்ந்து அவரது இடது காதைப் பற்றியது. ஆனால் யூ ஙின் தமது வலது காத்திலிருந்த தடியால் புலியை அடித்து அதனைக் கொன்றுவிட்டார். அவரது வலக் காதைப் புலி தனது நகங்களால் பலமாகக் கிழித்திருக்கிறது."

* * *

**திருவாங்கூருக்கு, ஸர் கவர் புகழுரை**

நாகபுரி சர்வ கலாசாலை உப அத்தியக்ஷகரான ஸர் ஹரி சிங் கவர் திருவாங்கூருக்கு வந்திருக்கையில் தெரிவித்ததாவது:—

"நான் திருவாங்கூரிலுள்ள பல இடங்களையும் பார்வையிட்டேன். இதிலிருந்து திருவாங்கூர் இந்தியாவில் மிகுந்த முன்னேற்றமடைந்த சமஸ்தானங்களுள் ஒன்றென்று நான் அபிப்பிராயப்பட்டேன். இந்த சமஸ்தானம் நல்ல கட்டுப்பாடுகளுடன் கூடியதாக இருக்கிறது. இங்கு வாழ்க்கைச் சௌகரியங்கள் நன்றாகக் கவனிக்கப்படுகின்றன. இங்குக் கட்டிடங்கள் நன்றாகவும் அழகாகவு மிருக்கின்றன. பள்ளிகளில் கூட்டம் அதிகம். இதன் நிர்வாகிகள் மிகுந்த மரியாதை யுள்ளவர்களாக இருக்கிறார்கள். மற்றப்படி இந்தச் சமஸ்தானத்தில் சுற்றுப் பிரயாணஞ் செய்கையில், இந்திய சமஸ்தானத்திலிருப்பதுபோன்ற உணர்ச்சியே ஏற்படவில்லை. முற்றிலும் விவசாயத்தையே நம்பியுள்ள தேசங்கள் எப்போதும் எளிய ஸ்திதியிலும் கடன்பட்ட ஸ்திதியிலுமிருந்து வருகின்றன. கைத்தொழிலில் ஈடுபட்ட தேசங்களே செல்வம் வாய்ந்த தேசங்களாக இருக்கின்றன. திருவாங்கூரில் இயற்கையாகவே ஏராளமான மூலப்பொருள்கள் இருக்கின்றன. இவற்றைச் சரியாகப் பயன்படுத்தினால், இந்தச் சமஸ்தானம் இந்தியாவிலுள்ள சமஸ்தானங்களில் எல்லாம் மிக்க செல்வம் வாய்ந்ததாக ஆகும். ரப்பர்த் தொழிற்சாலை நன்றாக நடத்தப்படுகிறது. இது அயல்நாடுகளிலிருந்து தருவிக்கப்படும் சரக்குகளுக்குப் பதிலாகப் பயன்படக்கூடிய சரக்குகளை உற்பத்தி செய்கிறது.

—"கத்தரிக்கோல்"

இந்த சங்கீத கானத்தைக் கேட்ட சௌதாமினியின் மனம் கரைந்து உருகியது. கண்ணீர் தானாகவே பெருக வாரம்பித்தது. பின்னும் சற்று நேரம் அந்த இனிமையான கானத்தை செவியாறக் கேட்டு ஆநந்திக்கையில் அவர்கள் பாடிக்கொண்டே போய்விட்டார்கள். சௌதாமினி ஜன்னலைப் பிடித்துக்கொண்டே சற்று நேரம் நின்றாள். பிறகு தான் முன்பிருந்த இடத்திற்கு வந்து உட்கார்ந்தாள்.

அதே சமயம் மெல்ல ஓசை படாமல் ஹரிநாத் அவ்விடம் வந்து "சௌதாமினீ!" என்று அழைத்த இன்ப ஒலியைக் கேட்ட உடனே சௌதாமினி தன்னையே நம்பாமல் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்து "ஹா...டாக்டர்!...டாக்டர்!"...என்றாள். மேலே இருவருக்கும் பேசுவதற்கு நாவெழவில்லை. தம்பித்துப்போய் நின்றுவிட்டார்கள். சில விநாடிகள் சென்ற பிறகே ஹரிநாத் சற்று மனம் தேறினவனாய் "சௌதாமினீ! தாதா எங்கே? ஏன் ஏதோ ஒரு மாதிரி இருக்கிறாய்! உட்காரு." என்று வாஞ்சையுடன் கூறியபடியே தானும் அமர்ந்தான். சௌதாமினியும் தலை குனிந்தபடியே அமர்ந்தாள்.

ஹரி :—சௌதாமினீ! நான் திடீரென்று வந்ததற்கு வித்யாசமாக எண்ணுகிறாயா!

சௌதாமினி வாய் திறக்க முடியவில்லை. கண்ணை மட்டும் கொட்டாமல் ஹரிநாத்தைப் பார்த்தபடியே 'இல்லை' என்ற கருத்தைத் தலையசைத்தும், உணர்ச்சி மூலமும் வெளிப்படுத்தினாள்.

ஹரி :—சௌதாமினீ! நாளை இரவு நான் ஊருக்குப் போகிறேன். கழுத்துக்குமேலேற்படும் வியாதிகளைப் பற்றி ப்ரத்யேகமாகப் படித்து பரீக்ஷை கொடுத்துவிட்டு வரவேண்டும். அதற்கு கவர்ன்மெண்டே என்னைத் தேர்ந்தெடுத்து அனுப்புகிறது வெளிநாடு சென்று சுமார் ஒரு வருட காலமாவது படித்துவிட்டு வரவேண்டும். இங்கிருந்து பலவித உபத்திரவங்கள் அனுபவிப்பதைவிடக் கண் மறைவாகப் போவதே மேல் என்று தீர்மானித்துவிட்டேன். அதனால் சொல்லி விட்டுப் போகலாம்; என்று வந்தேன்.

சௌதா :—அப்படியா! ஊரைவிட்டும் போய்விடுகிறீர்களா! தங்கள் மனைவிகூட வருகிறார்களா!...

ஹரி :—ராம ராமா!...இன்னும் அங்கேயும் அழைத்துச் சென்று உபத்திரவப் படவேண்டுமா! போதும்; போதும். நான் மட்டுந்தான் செல்லப்போகிறேன்....

சௌதா :—ஏன் அப்படிச் சொல்கிறீர்கள்! அவர்களால் என்ன கஷ்டம் ?

ஹரி .—சௌதாமினீ! யாராலும் எவ்விதமான கஷ்டமும் இல்லை. என்னுடைய விதியினால் எனக்கு எதுவும் கஷ்டமாகத் தோன்றுகிறது...சரி....அது கிடக்கட்டும்...உனக்கு இப்போது ப்ராக்டிஸ் எப்படி இருக்கிறது? ஏதாவது சுமாராக வருகிறதா! உனக்குப் போதிய வருமானங் கிடைக்கிறதா.?...

சௌதா :—உங்கள் தயவால் ஏதோ சுமாராக இருக்கிறது. என் கட்டை இருக்கையில் என்னருமை கோகிலாவும் தாதாவும் கஷ்டப்படாமல் இருக்கும் உதவியைக் கடவுள் எப்போதும் கொடுத்தால் போதும். அதற்குமேல் எனக்கு என்னதான் வேண்டும்? எதுதான் நான் விரும்பக்கூடியது இருக்கிறது? எண் சாண் வயிற்றுக் கஞ்சியா...இந்த வார்த்தை வாயிலிருந்து வரும் போது அவளை மீறிய துக்கம் பொங்கி தொண்டையும் நடுங்கி விட்டது கண்ணீர் மள மள வென்று பெருகி வழிந்தோடுகிறது. சிறு குழந்தையைப்போல் இரு கைகளாலும் கண்ணைப் பொத்திக் கொண்டு அப்படியே மேஜையின்மீது குப்புறக் கவிழ்ந்துவிட்டாள். தேகம் குலுங்குகிறது.

இந்த கன்ராவியைக் கண்டு சகியாத ஹரிநாத் சௌதாமினியின் தலையைத் தூக்கி நிமிர்த்திக் கண்களைத் துடைத்தபடியே "சௌதாமினீ! சௌதாமினீ! இதென்ன பரிதாபம்...ஐயோ! என்னால் உன்னிலைமையைக் கண்டு சகிக்க முடியவில்லையே...இதோ பாரு...சௌதாமினீ!...சௌதாமினீ!...என்று மிகவும் இரக்கமாகக் கூப்பிட்டான். சௌதாமினி சமாளித்துக்கொண்டு "இல்லை......

டாக்டர்! ஏதோ பேதமை புத்தி" என்றாள். அதற்குமேல் பேச முடியவில்லை...சில விநாடிகள் ஊமைபோலானார்கள் .... பிறகு ஹரிநாத் "சௌதாமினீ! நான் வரட்டுமா! தாதா வந்தால் சொல்லு கிறாயா!...

சௌதாமினி :—தலையை அசைத்து ஆகட்டுமென்று தெரி வித்தாள். வாய் அடைத்துவிட்டது.

ஹரி :—சௌதாமினீ! நீ சதா இம்மாதிரி இருந்தால் உன் உடம்பு எதற்குதான் உதவும்? உன் வேலையோ பிறரின் ப்ராண னையே காப்பாற்றும் தொழில். அம்மாதிரி வேலைக்கு இம்மாதிரி கவலையும் கண்ணீருமாயிருந்தால் நல்லதா....நீ நல்ல புத்திசாலி, நீயே இப்படி இருந்தால்...

சௌதா :—டாக்டர்! உங்களுக்குத் தெரியாத விஷயம் ஒன்றுமே இல்லை. மனத்திலுள்ள இன்பமோ, துன்பமோ எது வாயினும் அதை சுவருடனாவது சொல்லி ஆறு என்று பழமொழி கூறுவார்கள், டாக்டர்! என் விஷயத்தில் கடவுள் எனக்கு ஒரு கெட்டியான, பத்திரமான, ஆபத்தில்லாத சுவர் கூடக் கொடுக் காது என்னைச் சந்தியில் நிறுத்திவிட்டார். என் மனக் கொதிப்பு பொங்கிப் பொங்கி கண்கள் வழியாக கண்ணீராய் ஓடுவதையும், பெருமூச்சாக இதயத்தைப் பிய்த்துக்கொண்டு வருவதையும் என்னால் தடுக்கவே முடியவில்லை. அதன் கையில் நான் அகப் பட்டுத் தவிக்கிறேனேயன்றி எனக்கு அது வசமாகவில்லை. டாக்டர்! நீங்கள் சந்தோஷமாகச் சென்று வாருங்கள். சென்ற காரியத்தில் அபார வெற்றியுடன் வரவேண்டுமாய்ப் ப்ரார்த்திக்கிறேன். இந்த ஏழையின்மீது என்றும் தயவிருந்தால் போதும்.

ஹரி :—ஹா...சௌதாமினீ! இவ் வார்த்தை என்னைக் குத்திக் காட்டுவதுபோல் இருக்கிறது. என்னிதயத்தைத் துளாவிப் பார்த் தறிந்துள்ள நீயா இம்மாதிரி பேசுவது? இதற்கு நான் என்ன பதில் பேசுவதென்றே தெரியவில்லையே! என்னை அத்தனை அராக் கட்டை மனிதனாகவா நினைக்கிறாய்! ஈவிரக்கமற்ற கட்டையாகவா எண்ணுகிறாய்? சௌதாமினீ!....நான் இருக்கும் நிலைமை எனக்

கல்லவோ தெரியும்! என்னைப் படைத்த ஈசன்கூட அதைச் சரியாயறிவானே மாட்டானே!....

சௌதா :—(இடைமறித்து) டாக்டர்! மன்னிக்கவேண்டும். ஏதோ என்னை மீறிய வேகத்தில் சொல்லிவிட்டேன். நான் தங்களை ஒருபோதும் அவ்வாறு நினைக்கமாட்டேன் நம்மிருவருக்கும் இடையில் இருக்கும் பெரும் பாவத்தின் திரையில் நாம் மறைக்கப் பட்டிருப்பதால் கண்மூடித்தனமாகக் கூறிவிட்டேன்......என்று கூறும்போது யாரோ பேசிக்கொண்டே வரும் சப்தம் கேட்க சௌதாமினி நடைப்பக்கம் உற்று நோக்கினள்

இவளுடைய விரோதிகளான நர்ஸ்கள் கோலாகலமும், குஞ்சம் மாளும் அட்டகாஸமாக அங்கு ப்ரஸன்னமாகியதைக் கண்டதும் சௌதாமினிக்கு கபீரென்று கலக்கியது. "இந்தப் பாவிகள் இங்கு எதற்கு வந்தார்கள்" என்ற ஆத்திரமும், வெறுப்பும் உண்டாகி அவர்களைப் பார்க்கவும் பிடிக்காது திருப்பிக்கொண்டாள்; எனினும் அவர்களால் இன்னும் என்ன அனர்த்தம் நேருமோ என்ற பெரும் கவலையும் பீதியும் உடனே வந்து கப்பிக்கொண்டுவிட்டதால் அப்ப டியே இடிந்து குன்றிப்போய்விட்டாள்.

---

## 11—வது அதிகாரம்

### இடிந்த நெஞ்சம்—உடைந்த இதயம்

சன்யாசினியின் புகழ் தினே தினே ஊரெங் கும் பரவி விட்டதால் எங்கெங்கிருக்கும் ஜனங் களும் "அந்தம்மாளைக் கண்ணால் பார்த்தாலும் பாபம் தீரும்" என்ற நம்பிக்கையுடன் வரவாரம்பித்தார்கள். இம் மாதிரி வருங்கூட்டத்தில் ஒரு தினம் வந்த. ஒரு அம்மாள், தன்னோடு அழைத்து வந்திருந்த யுவதியை வணங்கச் செய்து "அம்மணீ! நீங்க நன்னா ஆசிர்வாதம் பண்ணுங்கோ.? இவளுக்கு சீக்கிரம்

குழந்தை பிறக்க வேண்டுமென்று அனுக்ரகம் செய்யுங்கோ!'' என்றாள்.

சன்யாசினி பூஜை பண்ணிக் கொண்டிருந்தவள் திரும்பிப் பார்த்தாள். உடனே, இந்த உலகமே தலை கீழாய் சுழல்வதுபோல் அந்தம்மாளுக்குத் தோன்றியதால் "கிருஷ்ணா கிருஷ்ணா!'' வென்று மனத்திற்குள் கூவியபடியே தலை குனிந்தாள். அந்த பெரியம்மாள் சன்னியாசினியை ஏற இறங்க சில விநாடிகள் உற்றுக் கவனித்த பிறகு "ஐயையோ!......எண்டீயம்மா!.......லலிதாம்பாளா நீ! அட ஆச்சரியமே''.......என்று கையை மூக்குமேல் வைத்துக் கொண்டு ப்ரமித்துப்போய் நின்று விட்டாள்......சன்னியாசினியும் தலை நிமிர்ந்து பார்க்கவில்லை. அங்கு அருகிலிருந்தவர்களெல்லோரும், சன்னியாசினியைப்பற்றி ஒன்றுமே தெரியாததால் ஏதேதோ எண்ணி இருக்கையில், 'லலிதாம்பாளா நீ?' என்று அந்தம்மாள் கேட்டதும் எல்லோருக்கும் வியப்பும் திகைப்பும் உண்டாகிவிட்டது. அச்சமயம் யார் வாயிலிருந்து என்ன சொல் வருமோ என்று உற்று ஒவ்வொருவரும் கவனித்தார்கள்.

சன்னியாசினி சில விநாடிகள் சென்ற பின்னர் ஒருமாதிரியாய் விசனமே நிறைந்த பார்வையுடனும், குரலுடனும் பேசத்தொடங்கி "ஆம். லலிதாம்பாள்தான். உங்களிடம் பரிபூரண ஆசியும், உபதேசமும் பெற்று ஞான உதயமாகிய லலிதாம்பாள்தான். சந்தேகம் வேண்டாம்.''......என்று கூறினாள். இவ்வார்த்தைகள் முற்றும் அங்கிருந்தவர்களுக்கு பின்னும் பன் மடங்கு ஆச்சரியத்தையும் ஒருவிதமான ஆவலையும் கிளப்பி விட்டன. அங்குள்ளோர்களில் வயது முதிர்ந்த பாட்டியம்மாள் ஒருத்தி அந்த பெரியம்மாளை நோக்கி "எம்மா! இந்தம்மாளை உங்களுக்கு முன்பே தெரியுமோ! இவர்கள் உங்களிடம் உபதேசம் பெற்றதாகச் சொல்லுகிறார்களே. அதென்ன.......எங்களுக்கு கொஞ்சம் விளங்கச் சொல்லுங்களேன் இவர்களுடைய பக்தி மகிமையில் நாங்களெல்லாம் ஈடுபட்டவர்கள். ஆகையால் அதையறிய ஆவலாகவிருக்கிறோம்'' என்றாள்.

இந்த வார்த்தையை காதிலேயே வாங்காத அந்தம்மாள் தவியாய்த் தவிக்கிறாள். முகத்தைப் பார்க்கவே முடியவில்லை.

ஏதோ சித்திரவதை செய்யும் வேதனை தாண்டவமாடுகிறது. அங்கு நிற்கவும் பிடிக்காமல் தன்னுடன் வந்தவர்களையும் அழைத்துக் கொண்டு சற்று உரத்த குரலில் "அட சனியனே! ராமேச்வரம் போனாலும் சனீச்வரன் விடவில்லை என்பதுபோல் யாரோ மகா உத்தம சன்னியாசினி என்று மலைத்துப் போய் வந்த இடத்தில் இந்த பீடையா வேஷம் போட்டு ஊரைக் கெடுக்கிறது......ராமா ராமா!......இப்படியும் அனியாயம் உண்டோ!" என்று கூறிக் கொண்டே போய் விட்டாள்.

இந்த இழிவும், குற்றமும் நிறைந்த வார்த்தை மற்றவர்கள் மனத்தில் தைத்தது. சிலருக்கு கலவரத்தை உண்டாக்கிவிட்டது. சிலருக்கு ஒன்றுமே புரியாது குழப்பமேற்பட்டு விட்டது. ஏற்கெனவே இதைப் பரிகஸிக்கும் கூட்டத்தினருக்கு இது ஓர் பெரிய ஆதாரமாகத் தோன்றியதால் பின்னும் வாயில் வந்தபடி எல்லாம் சொல்லவாரம்பித்தார்கள். ஒரு க்ஷண நேரத்தில் கணக்கற்ற விதத்தில் ஜனங்களின் மனோபாவங்கள் மாறி விட்டன.

சன்யாசினியோ கடவுள் மீது பதித்த விழியையும், மனத்தையும் திருப்பவே இல்லை. "கிருஷ்ணா! செய்த சோதனைகள் போதாதென்று இன்னும் செய்கிறாயா! என்மீது உனக்கு இரக்கமென்பதே உண்டாகப் போவதில்லையா! இப்பரந்த உலகத்தில் பிறந்த ஜீவராசிக்குள் இத்தகைய பாபாத்மாவையும் நீயே படைத்து நீயே வதைக்கலாமா! உன் கண் திறந்து பார்த்தால் என் முடிவுக்கு நேரம் இருக்குமா! ஒரு கணத்தில் உன்னடியில் சேர்த்துக் கொள்ளலாகாதா!.........சீச்சீ.........அளவற்ற பாபத்தைச் செய்து விட்டு பாபமே ஓர் பெண் உருவாக ஜனித்த நான் அதை முற்றும் அனுபவிக்காமல் அவன் பாதம் கிடைக்குமா என்றால் எங்ஙனம் கிடைக்கும்? செய்த கர்மத்தை எல்லாம் இன்னும் எந்தெந்த விதத்தில் அனுபவிக்க வேண்டுமோ அனைத்தையும் முடித்த பிறகல்லவோ அவன் சரண் கிடைக்கும். அதற்குள் எப்படி கிடைக்கும்? நெஞ்சே அஞ்சாதே......அவசரப்பட்டு மிஞ்சாதே"......என்று தனக்குத் தானே கண்ணீர் பெருக, பைத்தியக்காரியைப்போல் பேசிக் கொண்டே புலம்புகிறாள்.

சன்னியாசினியிடம் அதிக நம்பிக்கையும் வாஞ்சையுங் கொண்டுள்ள சில பெரிய பாட்டிமார்கள் இந்த ரகஸ்யத்தை எப்படியாவது அறிய வேண்டுமென்று ஆவல் கொண்டு சன்னியாசினியையே நோக்கி "அம்மணீ! நாங்கள் ஏதோ அதிகப்ரஸங்கித்தனமாகக் கேட்பதாக நினைக்க வேண்டாம். அந்தம்மாள் வந்து சென்றது முதல் நாங்கள் தங்கள் திருமுகத்தைப் பார்க்கிறோம். விசனமே கப்பிக்கொண்டு வாட்டுவதை யறிகிறோம். முற்றுந் துறந்த முனிவர்களுக் கொப்பான துறவியாகிய தங்களுக்கும் இத்தகைய விசனத்தைக் கொடுக்கக் கூடிய விஷயம் யாது என்பதை அறிய பரம ஆவலாக இருக்கிறோம். அந்தம்மாள் சொல்லிச் சென்ற வார்த்தைகள் கர்ண கடூரமாயிருக்கின்றன. அந்த ரகஸ்யத்தை நாங்களறியலாமாயின் தயவு செய்து தெரிவிக்க வேண்டும்." என்று கேட்டார்கள்.

இதைக் கேட்ட சன்னியாசினியின் கண்களில் முன்னிலும் அதிக நீர் ஓடியது. வாய் திறந்து பேச நாவெழாது துக்கம் தொண்டையை அடைத்தது சற்று சமாளித்துக் கொண்டு "அம்மா!.... என்னை நீங்கள் தேவ தூதன் போல் மதித்து பக்தி செலுத்துவதெல்லாம் இந்த கிருஷ்ணனுக்கே அர்ப்பணமேயன்றி எனக்கு ஒரு சிறிதும் தகாது. இந்த மகா கொடிய பாவியின் ரகஸ்யம் ஒன்றுமில்லை. வெட்ட வெளியான விஷயந்தான். தாய்மார்களே! இம்மாதிரியான பயங்கர சம்பவங்களும் உலகத்தில் நடக்கின்றன என்பதை பலரும் அறியும் பொருட்டு அவைகளை அப்படியே தேதிவாரியாக ஒரு சிறு கதைப் புத்தகம் போல் எழுதி வைத்திருக்கிறேன். அதையும், என் ஜீவியத்திற்குள் இன்னும் நடப்பவைகளையும்சேர்த்து அப்படியே புத்தகமாக்க வேண்டுமென்றே வைத்திருக்கிறேன். ஆகையால் அதைப் படித்துக் காட்டச் சொல்கிறேன் கேளுங்கள்........ அம்மா! நாகவல்லி! அந்த புத்தகத்தை நீயே படித்துச் சொல்லு." என்று கேட்டுக் கொண்டாள். உடனே நாகவல்லி படிக்கவாரம்பித்தாள்,

---

# உடைந்த இதயம்

## 1

கோதண்டத்திற்கு சம்பத்துக்கு மட்டும் சிறிது பஞ்சமே யன்றி சந்தானத்திற்கு ஒரு சிறிதும் பஞ்சமே இல்லை. மனைவிக்கும் குறைவில்லை. வெகு சிறு வயதிலேயே பழய காலத்து சம்பிர தாயத்துப்படிக்கு மணம் செய்து கொண்டார். அவருடைய 18 வயது முதல் குழந்தைகள் பிறக்கவாரம்பித்தன. அவருடைய 35 வயதுக்குள்ளாக சுமார் நாலைந்து ரெட்டைக் குழந்தைகளும், ஒத்தைக் குழந்தைகளுமாக 12 பெண்ணும் 5 ஆணும் வீட்டை அலங்கரித்து விட்டன. இத்தனைக்கும் கஞ்சி காய்ச்சி ஊற்றவும் கதியின்றித் தவிக்கவாரம்பித்தார். ஊரார் எல்லாம் இக்குடும் பத்தைப் பார்த்து குசேலர் குடும்பம் என்றும், தரித்திர குடும்ப மென்றும் பரிகஸிப்பதை அவர்களால் சகிக்க முடியவில்லை.

ஐந்து பெண் பிறந்தாலே அரசனும் ஆண்டியாவான் என்று பழமொழி கூறுகிறது. ஈரைந்துக்கு மேலும் இரண்டு குட்டி குஸருடன் 12 பெண்களை வைத்துக்கொண்டு அவர்களால் எப்படி தான் ஜீவனம் செய்ய முடியும்? பசியின் கொடுமையைத் தாங்காமல் குழந்தைகளை எப்படியாவது, எங்கேயாவது, துலைத்து விட்டால் போதும் என்ற எண்ணம் பெற்றவர்களுக்கே உண்டாகி விட்டது.

நாடகக் காரர்களுக்கும், குழந்தை இல்லாது தவிக்கும் குடும் பத்துச்கும் சில குழந்தைகளை விற்று விட்டார்கள். பிள்ளைகளை பெரிய பண்ணையக்காரர்களிடம் வேலை செய்து கஞ்சி குடிக்கும்படி விட்டுவிட்டார்கள் அப்படி சிலவற்றைக் கொடுத்தும், சிலர் இறந்துபோனதும் போக மிச்சம் நான்கு ஆணும் இரு பெண்ணும் பெற்றோருக்கு நிலைத்தன. அதற்கு மேல் உலகில் இருக்கவும் இடம் கிடைக்காமல் பிள்ளைகளை விட்டு தாயார் மறைந்தாள். தகப்பனார் மறு விவாகம் செய்து கொண்டு எட்டிக் காயைத் தின்பதுபோல் இக்குழந்தைகளை இளையாளுடன் வளர்த்து வந்தார்.

இளையாளுக்கும் 45, குழந்தைகள் பிறந்து விட்டன. மூத்த வளின் மக்களை வளர்க்கும் வைபவத்தைக் கேட்க வேண்டுமா?

இதற்குமுன்னிருந்த குழந்தைகளில் ஒரு பெண்ணும் ஒரு ஆணுந் தான் எஞ்சி நின்றன.

பெண்ணுக்கு 10 வயது ஆவதற்கு முன்பே இளையாள் அப் பெண்ணை யாருக்கோ கட்டித் தலைத்து அன்றே அவர்களுடன் அனுப்பி விட்டாள். இந்த இம்சையை விட்டுச் சென்றால் போதும் என்று எண்ணிப் பெண்ணும் சென்று விட்டது. விலங்கை விட்டுத் தொழுகில் மாட்டிய கதையைப் போல் அப் பெண்ணின் கதி முடிந்தது. 10 வயது சிறுமியாகிய அந்த பச்சைக் குழந்தை அங்கு படும் இம்சையையும் சங்கடத்தையும் கூறத்திறமே இல்லை. மாமி யொரு ப்ரம்ம ராக்ஷஸி. நாத்தி யொரு தாடகை, பாட்டி யொரு பூதகி, கணவன் ஒரு பேரரக்கன். இத்தனை பேர்களுக்கு மத்தியில் அச்சிறு பெண் எவ்விதந்தான் வாழும்?

183006.

10 வயது சிறுமியாகவே எண்ணாமல் குடும்ப பாரத்தையே தாங்கும் பெரியவள்போல் எண்ணி காலை முதல் மாலை வரையில் வேலை வாங்குவதும் சதா குற்றங்கள் கண்டு பிடித்து அப்பெண்ணை அடித்தும், திட்டியும் உபத்திரவம் செய்வதுமாக இருந்தார்கள். பருவகாலம் வந்த பிறகு புருஷனாவது ப்ரீதியாயிருப்பானோ பார்க்கலாம்......என்று பெண் மிகவும் பொறுமையாயிருந்து வந்தாள். வயது வந்த பிறகு புருஷனுடைய முகத்தைப் பார்க்கவும் கடுங் காவல் தண்டனை உண்டாகி விட்டது. புருஷன் வீட்டிலிருக்கும் சமயமெல்லாம் அப் பெண்ணை யோர் அறையிலேயே போட்டு வைத்துத் தாமே அவனுக்கு வேண்டிய சகல காரியங்களையும் செய்து அவன் வெளியில் சென்ற பிறகு மற்ற வேலைகளைச் செய்ய அப்பெண்ணை வெளியே விடுவதுமாக ஆயிற்று.

இத்தகைய சிறை வாசத்தை எத்தனை காலந்தான் அனுபவிக்க முடியும்? மனத்திற்கும் நிம்மதி இல்லை. வயிற்றிற்கும் உணவில்லை. இரண்டும் சேர்ந்து அப் பெண்ணால் தாங்கக் கூடாத பலவீனத்தையும், தேக அசுகத்தையும் கொடுத்தன.∴இவைகளையும் பாராட்டாமல் தன் தலைவிதியை எண்ணி அப்பெண் உழைத்து வந்தாள். தன் கணவனின் முகத்தைக் காண ஏங்கி விட்டதால்

ஒரு தினம் அவன் முகத்தையாவது கண்டு களிக்கும் பொருட்டு இரவில் எல்லோரும் தூங்கிய பிறகு அவன் படுத்திருக்கும் விடுதிக்குச் சென்று பாயில் படுத்திருக்கும் அவன் உருவத்தை நோக்கினாள். துக்கம் தாங்காமல் பொங்கிவிட்டது. "என்னை ஏன் இவ்விதம் வதை செய்ய வேண்டும்?.........நான் எத்தனை இம்சைகளையும் சகிப்பேன். ஆனால் நீங்கள் மட்டும் என்னுடன் பக்ஷமாக இருந்தால் அதொன்றிற்காக நான் நரக வேதனையையும் அனுபவிக்கத் தயார். என்மேல் கடுகளவு க்ருபையாவது காட்டக் கூடாதா!" என்று மனமுருகிக் கண்ணீர் பெருக நினைத்தபடியே தன் கணவனின் கால்களைத் தொட்டுக் கண்ணில் ஒற்றிக் கொண்டாள்.

## 2

அதற்குமேல் அங்கு நிற்கவும் பயமதிகரித்துவிட்டதால் மெல்ல தன் விடுதிக்குச் சென்றுவிட்டாள். இம் மாதிரியே அநேக நாட்கள் சென்று, பாத தரிசனமும், வந்தனமும் செய்துவந்தாள். இதை வெகு நாட்கள் வரையில் மாமி, நாத்தி முதலியோர்கள் கவனிக்கவில்லை. ஒரு தினம் இப் பெண்மணி வழக்கம்போல் தன் கணவனைச் சேவித்துவிட்டு வரும்போது தாங்க வியலாத துக்கத்தின் மிகுதியால் மயக்கம் போட்டு விழுந்துவிட்டாள். தடாரென்று விழுந்த ஓசை கேட்டதும் மாமி நாத்தி முதலியோர் வந்து பார்த்து அப் பெண்மீது அடங்காக் கோபங்கொண்டு அவளை இழுத்து தாறுமாறாக உதைத்துத் தள்ளினார்கள்.

மயக்கத்திலிருக்கும் அப் பெண்ணுக்கு ஒன்றுமே தெரியவில்லை. தெளிந்த பிறகே தனக்கு நேர்ந்த கதியையும் தன்னைப் பற்றி அவர்கள் பேசிக்கொள்ளும் கேவலமான வார்த்தைகளையும் கேள்விப்பட்டுத் துடித்தாள். அதாவது அவளுக்கு காக்காய் வலிப்பு வந்துவிட்டதாயும் தடால் தடால் என்று கீழே விழுந்து உதைத்துக்கொண்டு இழுப்பதாயும் பிறகு தெளிகிறதாயும் இம் மாதிரி வெகு நாட்களாக இருப்பதென்றும் கதை கட்டிவிட்டார்கள்.

ஒருவிதமான ஸ்வதந்தரமும் இல்லாது அடிமையாயிருக்கும் அப் பெண் என்ன செய்ய முடியும்? "எனக்கு அம் மாதிரி

வியாதி யொன்றுமில்லையே. வீணாக வதைப்பது போதாமல் இவ் வித வ்யாதியையுமா என் தலையில் சுமத்தி இழிவை உண்டாக்க வேண்டும்?' என்று கெஞ்சிக் கூத்தாடிக் கேட்டும் செவிடன் காதில் சங்காதம் செய்ததுபோலாகிவிட்டது. இவ் வதந்தி வெகு சீக்கி ரத்திலேயே ஊர் முற்றும் பரவிவிட்டது. என்ன செய்வாள் பாவம்? தன் தலை விதியை யாரிடம் சொல்லி முறையிடுவாள்? இந்த மனோ வ்யாகூலத்தினால் பலவீனம் அதிகரித்துவிட்டதால் அடிக்கடி மயக்கமும் வர வாரம்பித்தது.

இத்தனை நாளாக காக்காய் வலிப்பு என்று சொல்லிவந்த மயக்கம் திடீரென்று ஏவல், சூனியம், ப்ரம்மராக்ஷஸ் பிடித்திருக்கி றது என்ற பலவிதமான பெயரில் மாறியது. எல்லாவற்றையும் விட இந்த வார்த்தைகளை அப் பெண்ணால் சகிக்கவே முடியாது போய்விட்டது. தினம் ஒரு மந்திரவாதி என்று பெயர் வைத்துக் கொண்டு வரும் தடியன்களின் ஆர்ப்பாட்டமும் அட்டூழியமும் அட்டகாஸமும் சகிக்க முடியாது போய்விட்டது. சக்கரத்தைப் போட்டு உட்கார வைப்பதும், கண்டவிதமான கேள்விகளைக் கேட்ப தும், பிரம்பால் அடித்துக்கொல்லவதுமான இம்சை நாளுக்கு நாள் அதிகரித்துவிட்டது.

உண்மையில் அம் மாதிரி ஏதேனும் இருப்பின் அவன் செய் யும் அனியாயத்திற்கு ஈடு கொடுக்கும். ஒரு குற்றமும் இல்லாத அப் பெண்ணை நோக்கி "எங்கே பிடித்தாய்?என்ன செய்தாய்? உனக் கென்ன வேண்டும்? சொல்லு. போறயா இல்லையா?" என்றெல்லாம் கேட்டு, பிரம்பினால் அடித்து உபத்திரவிக்கும் உபத்திரவத்தைத் தாங்கமாட்டாது அப் பெண் மந்திரவாதியின் முன்புகூட வருவ தற்கு பயந்து உள்ளேயே கதவைத் தாளிட்டுக்கொண்டாள்.

இதுவும் பிரம்மராக்ஷஸின் செய்கை என்று கூறி உள்ளுக்கு வெளியே நாற்புறமும் நெருப்புக் கும்மட்டி வைத்து நிறைய மிளகா யைக் கொட்டி நெடி போட்டு அப் புகையை ஜன்னல் வழியால் உள்ளே வரச்செய்தார்கள். இந்த நெடியின் வேகம் தாங்காது இருமலும் தும்மலும் பிச்சிக்கொண்டு வந்து திணறிப் போய் வெளி

யில் வந்து விழுந்துவிட்டாள். இருமல் அதிகமாகிவிட்டதால் ரத்தரத்தமாக வாந்தியாக வாரம்பித்ததைப் பார்த்து. "இது ரத்தக் காட்டேரி பிடித்திருக்கிறது. ஒன்றிரண்டல்ல. பலவித பேய்கள் ஒன்ருய் பிடித்துவிட்டன. இது மகா கொடியது. மனிதர்களைக் கொலையும் செய்துவிடும். குழந்தைகளை விழுங்கிவிடும். கொன்று போட்டுவிடும். ஜாக்ரதையான இடத்தில் வைத்து தக்க மந்திரம் செய்யவேண்டும்'' என்று கூறிவிட்டான்.

அதற்குமேல் அப் பெண்ணை இதுதான் சாக்கு என்று ஒரு அறையில் போட்டுப் பூட்டிவிட்டார்கள். மந்திரவாதி வந்து சக்கையாக அடித்துச் செல்வதும், மற்றபோது அறையில் கிடப்பதுமாக ஆய்விட்டது. அச்சமயம் அப் பெண்ணின் மாமிக்கு உறவு ஒருத்தி அங்கு வந்தாள். அவள் அப்போதுதான் ஊரிலிருந்து நிலம் புலன்களை விற்று ரொக்கமாக சில ஆயிரம் ரூபாய்களை எடுத்துக்கொண்டு வீடு வாங்கும் பொருட்டு வந்திருக்கும் உளவை அவர்கள் அறிந்தார்கள்.

அந்தம்மாளின் உடம்பில் சுமார் 5 ஆயிரம் ரூபாயிக்குமேல் ஆபரணங்கள் இருந்தன. அவைகளையும் கண்ட தாயிக்கும், பெண்ணிற்கும் அவைகளையப்படியே அமுக்கி ஏப்பம் விட்டுவிடவேண்டுமென்ற பேராசை உண்டாகியது. அப் பெண்ணை சிறையிலிட்டிருப்பதுபோலிருப்பினும் இவர்களுடைய சதியாலோசனை அவளுக்கு நன்ருகத் தெரிந்துவிட்டது. என்ன செய்வாள் பாவம். அந்த நிரபராதியான அம்மாளை எப்படியாவது தப்பவைக்கவேண்டுமென்ற ஆவல் அந்தப் பெண்ணின் மனத்தில் போராடியது.

கைதியை விட மோசமாகவிருக்கும் அவளால் இந்த காரியம் எப்படி முடியும்? அப் பெண்ணிருக்கும் அறைப் பக்கம் ஈ காக்காய் கூட நடமாட்டம் கிடையாது. வாய் திறந்து எது பேசினும் பிசாசின் கூத்து என்கிருர்கள். இம் மாதிரி நிலைமையில் தவிக்கையில் ஒரு தினம் நடு நிசியில் எப்படியோ அப் பெண்ணின் அறை திறந்துவிடப் பட்டிருந்தது கண்டு அவள் நகர முடியாமல் நடந்து வெளியில் வந்தாள். அப்போது ஊரிலிருந்து வந்த அம்மாளின் தேகம்

கட்டைபோல் விரைத்துப்போய் பூமியில் கிடத்தியிருக்கும் மகா பயங்கரத்தையும் கோரத்தையும் அப் பெண் பார்த்து குய்யோ முறையோவென்று கத்தினள்.

அந்த தருணத்தையே எதிர் பார்த்திருந்ததுபோல் அவர்கள் ஓடி வந்து "ஐயோ! காட்டேரி வெளியில் வந்துவிட்டதே...அந்தம் மாளையும் கட்டைபோலாக்கிவிட்டதே!" என்று பெரியதாகச் சத்த மிட்டுக் கத்தினர்கள். அடுத்த வினடியே ஊரே ஒன்றகூடிவிட்டது. கண்டபடி அப் பெண்ணைத் திட்டி அடித்து மீண்டும் கைகால்களைக் கட்டிப் போட்டுவிட்டார்கள். அந்தம்மாளின் பணம் முற்றும் எண் ணியபடியே அமுக்கிவிட்டார்கள். அந்த விபரீத சம்பவம் முற்றும் காட்டேரியின் தலையில் வடிந்ததால் அதற்குமேல் காட்டேரியை வீட்டிலேயே வைத்திருக்கலாகாதென்று ஒரு மந்திரவாதியுடன் தாய் வீட்டிற்குத் துரத்திவிட்டார்கள்.

3

அதி பால்யமா யிருந்த காலத்திலேயே தாய் வீட்டில் பட்ட பாடு மறந்துவிடுமா! அதோடு இத்தனை பட்டங்களுக்கு மத்தியில் இளைய தாயார் வைத்துக்கொள்ள விரும்புவாளா! அவள் இப் பெண்ணைக் கண்ணுல் பார்ப்பதற்கே பயந்து விரட்டிவிட்டாள். தகப்பனுக்கு மனங் கேட்காமல் பெண்ணைப் பார்த்துப் புலம்பித் தவித்தார்...புறக்கடையில் ஒரு அறையிலாவது அவள் இருக் கட்டும் என்று சொல்லிப் பார்த்தார். அம் மாதிரி இங்கு வைத்துக் கொள்வதாயின் தான் தன் குழந்தைகளுடன் தாய் வீடு போய் விடுவதாய் பயமுறுத்தினள்.

பேதைப் புருஷன் என்ன செய்வான் பாவம்!...பெண் "எனக்கு காட்டேரியோ மற்ற எதுவோ ஒன்றமே இல்லை. இது வீண் கட்டுக்கதை" என்று எத்தனையோ நயமாகத் தன் தந்தை யிடம் கூறியும் அதுவும் வீணகியது. கட்டாயம் காட்டேரிதான் இருக்கிறது என்றதையே இளையாள் ஊர்ஜிதப்படுத்திவிட்டாள். அப் பெண்ணின் முகத்தில் விழிக்காமலேயே இரண்டு நாட்கள் அப் பெண்ணை தனி விடுதியில் தகப்பனர் வைத்திருந்தார்.

யாருடைய போதாக் காலமோ இளையாளின் குழந்தை யொன்று திடீரென்று மாந்தத்தினால் இறந்துபோய்விட்டது. உடனே "இந்த காட்டேரிதான் என் குழந்தையை வாயில் போட்டுக்கொண்டது என்று இளையாள் முறையிட்டுக் கதறவாரம்பித்ததையே அப் பெண்ணின் பிதாவும் நம்பி உடனே இது எக்கேடாவது கெட்டுப் போகட்டும் என்று அடித்துத் துரத்திவிட்டார்.

4

இரு கையையும் விட்ட த்ரௌபதியைப்போல் சகல விதத்திலும் விலக்கி ஒதுக்கப்பட்ட அனாதைப் பறவைபோன்ற அப் பெண்மணி எங்குதான் போவாள்? என்னதான் செய்வாள்? உயிர் மீது அவளுக்கு ஒரு சிறிதும் விருப்பமில்லை எனினும் தற்கொலைக்கு அவள் கடுகளவும் இணங்கவில்லை. தன் வாழ்க்கையில் கஷ்டங்கள் அதிகமாக ஆக ஆத்ம ஞானமும் மனோவைராக்கியமும் கூடவே வளரத் தொடங்கியது.

பூர்வ ஜென்மத்துக் கர்மாவை அனுபவித்து முடிக்காது தற்கொலை செய்து இறந்துவிட்டால் இந்த ஜென்மத்துக் கர்மாவுடன் அடுத்த ஜென்மத்துக்கும் பாப மூட்டை சாருவதுடன் பேயாய்ப் பிறந்து திரிய நேரும் என்ற எண்ணம் அப் பெண்ணின் மனத்தில் பதிந்துவிட்டதால் எது வந்தாலும் அனுபவிக்கவே துணிந்தாள். எத்தனை வேதாந்தமும் விவேகமும் இருப்பினும் பெண்பாலாகையினால் கண்டபடி திரிய மனம் கூசி அச்சமுண்டாகியது. சிலர் 'பைத்தியம்' என்றார்கள். சிலர் 'கெட்டுப்போனவள் தெருத்தெரு வாய் அலைகிறாள்' என்றார்கள். யார் யாருக்கு எப்படி தோன்றுகிறதோ அம் மாதிரி எல்லாம் சொன்னார்கள்.

ஒன்றையுமே அப் பெண் லக்ஷியம் செய்யாமல் கால் நடையாகவே நடந்து வெகு தூரம் போய்விட்டாள். விசனம் தாங்காத வேதனையும் பசியின் கொடுமையும் ஒன்று சேர்ந்து மூளைக் கலக்கமும் உண்டாகி உண்மையிலேயே பயித்தியம் பிடித்துவிட்டது. ஆனால் எந்த விதமான இம்சையும் செய்யாமல் சதா 'மாமியார், நாத்தனார்...கணவன்...மாமியார், நாத்தனார்...கணவன்.' என்றதை

மட்டும் பிதற்றுவதுடன், சிரிப்பது, அழுவது இம் மாதிரியே ஆரம்பித்தாள்.

5

இதற்குள், அங்கு அவர்கள் கொள்ளையடித்த பணத்தைக் கொண்டு பெரிய மாடி வீடு கட்டிக்கொண்டு தடபுடலாக வாழ வாரம்பித்து தங்கள் மகனுக்கு இரண்டாவது விவாகம் செய்ய ஏற்பாடு செய்தார்கள். அதுபரியந்தம் உலகவியல்போ, மக்கள், மனைவி என்ற வாஞ்சையோ, தான் ஒரு ஆடவன் என்கிற கவுரவமோ ஒன்றுமே இல்லாதிருந்த அவனுக்கு இவர்களுக்கு திடீரென்று பணம் வந்துவிட்டதும், அந்தம்மாளை ஒழித்துவிட்டதும், தன் மனைவியை துலைத்ததும் ஒரு சிறிது மண்டையில் புகுந்து வேலை செய்ய வாரம்பித்ததால் இத்தனை பணத்தையும் அவர்களே அமுக்கி விட்டார்கள் என்ற எண்ணமும், வெறுப்பும் உண்டாகிய பிறகே தன் மனைவியை இவர்கள் செய்த கொடுமைகளும் அனியாயங்களும் மனத்தில் உறுத்த வாரம்பித்தன.

முதல் மனைவியை செய்த கொடுமையும் அவள் கதியே அதோ கதி யாகிவிட்டதையும் அதன் பிறகே எண்ணி வருந்தியதால் கல் யாணம் செய்துகொள்ள மாட்டேனென்று மறுத்தானும். தான் விவாகம் செய்துகொள்வதால் தானும், தன்னோடு அவளும் சேர்ந்து ஏன் வருந்தவேண்டும்? கொலைக்கும் அஞ்சாத பாதகர்களிடம் இனி யாரையும் சிக்கவைக்கலாகாது என்ற ஞானம் உதயமாகியதாம். முதல் மனைவியைப்பற்றி அவனுடைய சில சினேகிதர்களும் அக்கம் பக்கம் இருப்போரும் சொல்லக் கேட்கக் கேட்ட அவனுடைய மனது சற்று மாறி தன்னையே தான் நொந்துகொள்ளவும், தன் னுடைய முட்டாள்தனத்தினாலும், மவுட்டீகத்தனத்தினாலும் தானே ஒரு பெண்ணின் கதி இப்படியாகிவிட்டதென்றும் சிந்தித்தா னும். கண் கெட்ட பிறகு சூரிய நமஸ்காரம் செய்து என்ன பலன்?

அதே வேதனையினால் இணங்காமல் மறுத்து வந்தும் பெற் றோர் செய்யும் உபத்திரவத்தைத் தாங்கமாட்டாமல் இணங்கும்படி நேர்ந்தது. ஆனால் தான் முன்போல் மண்டூகமாயிருக்காமல் கல்யா

ணத்தைச் செய்துகொண்டு தன்னிஷ்டம்போல் மனைவியை நடத்துவதென்றும் தன் பெற்றோருக்கும் சகோதரிக்கும் புத்தி வரச் செய்ய வேண்டும் என்றும் தீர்மானித்துக்கொண்ட பிறகே இசைந்தானும். பெண் வீட்டாரிடம் முதல் விவாகம் ஆகியதை மறைக்க முடியவில்லை. அதற்கு காட்டேரி, முனி, ப்ரம்மராக்ஷஸ் முதலிய பல பேய்கள் பிடித்து ஆட்டியதாயும், அதனால் வீட்டில் கொலை முதல் நடக்க வாரம்பித்ததென்றும், தானே எங்கேயோ ஓடிவிட்டதென்றும், அதற்கு முன்பே அதன் நடத்தை சரி இல்லை என்றும் வாய் கூசாமல் கூறி விவாகத்தை நிச்சயித்துவிட்டார்கள்.

கொலை செய்த பணமோ! கொள்ளையடித்த பணமோ! யார் கண்டது? பெரிய அந்தஸ்தில் இருப்பதால் ஏராளமான சீர் வரிசைகளுடன் விவாகம் ஏற்பாடாகிவிட்டது. பிள்ளைவீட்டுக்காரர்களும் வந்து சேர்ந்தார்கள். பைத்தியம் பிடித்த அந்த பெண் அப்போது அவ்வூரில் திரிந்துகொண்டிருந்தாள். வீதியில் பிள்ளைவீட்டார் வரிசைகளுடன் மேள வாத்தியம் முழங்க போய்க்கொண்டிருக்கையில் அந்த பைத்தியக்காரப் பெண் தன் வழக்கப்படி "மாமியார்! நாத்தனார்! கணவன்...மாமியார்! நாத்தனார்! கணவன்"...என்று கூவிக்கொண்டு செல்வதைக் கண்டு கூட்டம் கூடி வேடிக்கை பார்த்து நின்றிருந்தார்கள்.

அச்சமயம் மணமகன் அவ் வழியே செல்லும்போது அப் பெண் அகஸ்மாத்தாக தனது மாமியையும் நாத்தியையும் கண்டுவிட்ட உடனே பதறிப்போய் பழய நினைவுகள் முற்றும் திடீரென்று உண்டாகி அவளுடைய கதி கலங்கச்செய்துவிட்டது பழய பிசாசு ஓட்டியதும், கொலை செய்து பணம் சம்பாதித்ததும், தன்னைப் படுத்திய சிறுமை மகளும் கண் முன்பு அப்போதே நிகழ்வதுபோல் தோன்றின. வெகு நாட்களாகக் காணதிருந்த தன் கணவனின் முகத்தைப் பார்த்தவுடனே அவனுக்கே கல்யாணம். அவனே கல்யாண மாப்பிள்ளையாகச் செல்கிறான் என்று தெரிந்துகொண்டு அவனையே உற்று கவனித்தாள். மனம் தாங்கவில்லை. துக்கம் அபரிமிதமாகப் பொங்கிவிட்டது.

வெறி பிடித்தவள்போல் கண்ணீர் பெருக தன்னிரை யழிந்து ஓடி வந்து எல்லோரும் அப்படியே தம்பித்து நிற்கும் வண்ணம்

தன் கணவனின் காலில் விழுந்து "நாதா! நாதா!" என்று கூவினள். சில விநாடிகள் விக்கி விக்கிப் புலம்பி பேசமாட்டாது ப்ரமை கொண்டு அவன் காலை விடாமல் தவித்தாள். பிறகு சற்று சமாளித்துக் கொண்டு "நாதா!...உங்களுக்கு கல்யாணமா! பரம சந்தோஷம்.... நீங்களும் உங்கள் மனைவியும் பல்லாண்டுகள் சகல பாக்யத்துடனும் வாழுங்கள். ஆனல்...அந்த பெண்ணையாவது அக்கினி சாக்ஷியாக தொட்டு தாலி கட்டிய மனைவி என்ற நினைவுடன் நீங்கள் நடத்துங்கள். அவளையும் ஓர் மிருகமாக எண்ணாதீர்கள்." என்று கூறி முடிப்பதற்குள் அருகிலிருந்தோரும், மாமி, நாத்தியும் ஓடி வந்து அவளை இழுத்துத் தள்ளினர்கள்.

நமது அருங் குண பூஷணமணியாகிய அப் பெண்மணி மாமியின் காலில் விழுந்து வணங்கி "அம்மா! நீங்கள் எனக்கு மாமி மட்டுமாக அல்லாமல், பரம ஞானோபதேசம் செய்ய வந்த குருவாகவும் அமைந்தீர்கள். என்னை இதுகாறும் பிடித்துத் தள்ளியது போதும். இனியும் தள்ளவேண்டாம் இதோ போய்விடுகிறேன். இனிமேல் வரும் பெண்ணையாவது, அதுவும் உங்களைப்போல் ஒரு மனித வர்க்கத்தில் சேர்ந்த ஜீவன் என்கிற எண்ணத்துடன் நடத்துங்கள். அனியாயமாக ஒரு உயிரைக் கொலை செய்து, பொருள் திருடி பெரிய மனிதர்கள்போல் நடப்பினும் கொலை செய்த பாவம் தீருவதற்கு எல்லாம் வல்ல அருள்ஜோதி ஒன்று இருக்கிறதென்பதை உணர்ந்து அதை வணங்குங்கள். நான் இனி உங்கள் கண்ணில் சிக்கமாட்டேன். இதோ போய்விடுகிறேன்." என்று கூறிவிட்டு திரும்பிப் பாராமல் ஓட்டமாக ஓடிவிட்டாள்.

6

இச் செய்கை அவர்களுக்கு மிக்க ஆத்திரத்தையும், அடங்கா விசனத்தையும் கொடுத்துவிட்டது. மணமகனுக்கு அவனது இதயமே உடைந்துவிட்டது. "சிச்சி!...இனி இந்த உலக வாழ்க்கையே வேண்டாம் எனது அஞ் ஞான இருளைப் போக்கி இம் மாய ப்ரபஞ்சத்தில் மக்கள் உய்யும் வழியைக் காட்டி உபதேசம் செய்த எனது மனைவியே எனக்கு குரு." என்று கூறிக்கொண்டே, பெற்றவர்களை

யும் மற்றவர்களையும் மதியாது அந்த பெண் சென்ற திக்கை நோக்கி ஓடினான்....

அந்த பெண்ணைக் கண்டு பிடித்து அவள் கைகளைப் பிடித்துக் கொண்டு "லலிதா! லலிதா! என்னை மிருக ஜாதியிலிருந்து மனித ஜாதி யாக்கிய புனிதவதியே!...புண்ணியவதியே! நீயும் புனர்ஜன்மம் கொண்டவளைப்போல் புதிய வாழ்வு உலகில் ப்ரவேசித்து விடு. இனி நான் முன்போல் ஒருபோதும் இருக்கமாட்டேன். இது சத்தியம். என்னை நம்பு...நீயும் நானும் பாலும் தேனும்போல் இனி வாழ்க்கையை நடத்தலாம்...வா...இனி என்னை வருத்தாதே...... நான் குருடனாயிருந்த காலம் மறைந்துவிட்டது. இனி கண்ணைப் பெற்றுவிட்டேன்" என்று கெஞ்சினான்.

அப் பெண்ணின் நிலைமை தத்தளிப்பாகிவிட்டது. எனினும் அவளுடைய உடைந்துபோன இதயத்தை ஒட்ட வைக்க ஒருவராலும் முடியவில்லை. தனது அதி பால்ய பருவத்தில் ஆநந்தமாயும் ஆதரவுடனும் தன்னைக் கட்டிக் காத்து வாழ்க்கை நடத்த வேண்டிய காலத்தில் நிராதரவாய் அனாதைப் பறவைபோல் பறக்க விட்டுப் பழி என்னும் மலையைத் தலையில் புரட்டிக் கதற வைத்த பின்னர் இனிமேல் வாழ்க்கையாம் நடத்துவதாம்...ஹூம்...இனி இஜ் ஜென்மத்தில் இல்லை. காரியுமிழ்ந்து கண்டோர் சிரிக்கும்படி பயித்தியக்காரியாய் தெருவில் அலையவிட்டுப் பார்த்த மனிதர்களின் கண்முன்பு இனிமேல் குடும்பம் நடத்தி ஒரு நாடகம் நடிக்கவேண்டுமா!......

போதும் போதும்...இனி எனக்கு அந்த ஆசையே வேண்டாம்...என் முடிவு இனி எந்த காட்டிலோ, மேட்டிலோ...எங்கேயோ யார் கண்டது? அதுதான் சாச்வதம். இந்த மாயப்ரபஞ்சத்தின் வாழ்க்கைச் சுழலில் நான் அகப்படமாட்டேன். அகப்பட்டு அவதிபட்ட நாள் போதும்" என்று கூறிக்கொண்டே நிற்காமல் ஒரே ஓட்டம் பிடித்தாள். எத்தனை தூரம் முடியுமோ அத்தனை தூரமும் கணவன் கூட ஓடி வந்தான். உபயோகமில்லாது

போய்விட்டதால் அதோடு அவன் எப்படியானான் என்பதே அப் பெண்ணுக்குத் தெரியாது.

அவள் நெடுந் தூரம் ஓடி வந்த களைப்பினால் அந்த ஊர் கோயில் வாசலில் வந்து அப்பாடாவென்று உட்கார்ந்தாள். அப் போது அக் கோயிலுக்கு ஒரு பெரிய யாத்திரைக் கூட்டத்தினர், கால் நடையாகவே நடந்து ஒவ்வொரு ஊராக ச்வாமி தரிசனம் செய்துகொண்டு வருபவர்கள், அந்த கோயிலுக்கும் வந்தார்கள். அவர்கள் சாதாரணமாக வேஷம் போடும் போலிக்கூட்டமாக இரா மல் உண்மையில் துறவிகளாயும், பக்திமான்களாயும், சீலக்கொழுந் தாயும், சில பெண்மணிகளும்கூட காணப்பட்டதால் அந்த கோஷ்டி யுடன் அப் பெண்மணியும் கலந்துகொண்டாள்.

அன்று முதல் எம்பெருமானின் கருணை கடாக்ஷத்தினால் அப் பெண்ணுக்கு பல திவ்ய க்ஷேத்திர யாத்திரைகளும் பகவத் தரிசன மும், புண்ய நதி ஸ்நானமும் கிடைத்தன. அந்த உத்தமர்களின் சகவாஸத்தின் பலனாலும் மேற்குறித்த தரிசனம்ருதத்தினாலும் அப் பெண்ணின் அஞ்ஞான இருள் அறவே ஒழிந்து, ஞான உதயம் ஆகிவிட்டது. அவளுடைய உடைந்துபோன இதயம் வைராக்ய மும், சீலமும், பக்தியும், தீவிரமான துறவறமும் நிறைந்து துளிர்க்க வாரம்பித்தது.

7

இதற்கிடையில் வருடங்கள் சகடக் கால் போல் சென்று மறைந்தன. கிருஷ்ணனின் படங்களும் விக்ரகமும் அவளுடைய ஜீவாதாரமாயின. அவன் நாமமே அப் பெண்ணின் வாழ்க்கையின் துணையாயிற்று. இந்நிலைமையில் மீராபாயைப்போல் பஜனையி லும் பக்தியிலும் ப்ரவஸித்தி பெற்றாள். பல அனாதைகள் அவ ளிடம் வந்து பஜனையில் கலந்துகொண்டார்கள். எம்பெருமான் பழய பயங்கரச் சுழல் காற்றிலிருந்து காப்பாற்றி கரையாகத் தன் சரணாரவிந்தத்தை யளித்தும் அப் பெண்ணின் கன்ம வினை யின்னும் தீராதிருந்ததால் பின்னும் ஒரு ஆபத்து தானே மலிய வந்து சேர்ந்தது.

அதாவது,—அந்த பஜனையில் வந்து சேர்ந்துவிட்ட ஓர் பெண்ணை, அந்த சன்யாசினி கலைத்து ஏமாற்றி இழுத்துக்கொண்டு வந்துவிட்டதாக ஓர் பழியைச் சாட்டி அதை ப்ரமாதம் செய்து சன்யாசினியின்மீது வழக்கும் தொடரத் தயாராக வந்துவிட்டார்கள். சன்யாசினியோ தன் கிருஷ்ண த்யானத்தைத் தவிர வேறு ஒரு ஜோலிக்கும் வராமல் வசைமாரிகளைத் தாங்கிக்கொண்டிருந்தாள். 'அந்த பெண்ணை வாவென்று யாரும் அழைக்கவே இல்லை. தானே வந்து சேர்ந்தாள்.' என்று மற்றையோர் எத்தனை சொல்லியும் அவர்கள் காதில் வாங்கவில்லை. அந்த பெண்ணைப் போகும்படி கூறியும் அவள் லக்ஷியம் செய்யவில்லை. போக மறுத்துவிட்டாள்.

இம் மாதிரி சச்சரவுகளுக்கு இங்கு இடமில்லை. நீ போய்விடு. பஜனைக்கு நிர்மலமான மனமும் த்யானமும் அவச்யமேயன்றி கவலையும் கலக்கமும் இருந்தால் த்யானத்தின் மகிமையே குறைந்துவிடுமென்று அப் பெண்ணை சன்யாசினி துரத்திவிட்டாள். அப் பெண்ணும் குடிகாரக் கணவனிடம் மிகவும் சீர்மார்பட்டு நொந்து போய்விட்டதால் அவள் அவனிடம் மீண்டும் போக வெறுத்து தன்னுயிரையே மாய்த்துக்கொள்ளத் துணிந்து குளத்தில் விழுந்து இறக்கத் தீர்மானித்துவிட்டாள்.

அவள் நடு நிசியில் எழுந்து குளத்திற்குச் செல்வதை சன்யாசி கண்டு பிடித்து அவளைத் தடுத்து விழாமல் காப்பாற்றி ஆதரிப்பதாக ஏற்றுக்கொண்டாள். இப்போதும் அப் புண்ணியவதி வெகு வைராக்யமாயும் வீரக் கொழுந்தாயும் விளங்குகிறாள். அந்த குடிகாரன் கொண்ட த்வேஷம் பின்னும் அதிகரித்துவிட்டதால் அவன் வழக்கை தொடுத்து சன்யாஸினியை நீதித்தலத்திற்கு இழுக்கத் துணிந்தான்.

ஆனால், நம்பிய பக்தர்களுக்கு நாயிந்தேன் என்று காக்கும் கருணை வள்ளல் அம் மட்டும் காட்டிக்கொடுக்காமல் தன் அருள் ஜோதியால் அவ் விபத்திலிருந்து காத்துவிட்டார். அக் கொடிய குடியனுக்கு நல் புத்தி புகட்டும் பொருட்டு அவன் குடிவெறியில்

செய்த ஓர் பெரிய தீங்கிற்காக அவனையே பிடித்துக் கைதியாக்கி 4 வருடம் தண்டித்துவிட்டார்கள்.

இந்த அபூர்வ சம்பவத்தின் பலனால் சன்யாசினியிடம் அன்பு கொண்ட ஒவ்வொருவரும் இதை மிகவும் பாராட்டிக் கொண்டாடியதோடு நிரபராதியாயும் வீரக்கொழுந்தாயும் இருக்கும் சன்யாசியை சந்தியில் இழுக்க எண்ணியதால் தான், அந்த பழி தன் தலையிலேயே வந்தது என்று பெரிதும் பாராட்டிப் பேசினார்கள். இதன் மூலம் சன்யாசினியின் மகிமை அதிகரித்தது. அதற்குப் பிறகு சன்யாசினி நின்ற இடத்தில் நிற்காமல் ஊர் ஊராய்ச் சுற்றும்போது அவளுடைய மாமி நாத்திகளுக்கு இந்த விஷயம் காதில் எட்டியதும் வயிற்றெரிச்சலும், ஆத்திரமும் பொங்கிவிட்டன.

அவர்களின் ஊழல் தெரிந்தவர்களுக்கெல்லாம் வெட்கமும் அதிக வெறுப்பும் த்வேஷமும் உண்டாகி திட்டவாரம்பித்தார்கள். இதனால் அவர்கள் ஏற்கெனவே மருமகளிடம் இருந்த ஆத்திரத்துடன் இன்னும் பன் மடங்கு அதிக கோபங்கொண்டு எப்படியாவது அவளைத் தொலைக்க வழி செய்யவேண்டுமென்று சதியாலோசனை செய்துகொண்டிருந்தார்கள். சன்யாசினிக்கும் பஜனை கோஷ்டிக்கும் அடிக்கடி அனேக பெரிய மனிதர்கள் வீட்டில் விருந்து சாப்பாடுகள், சமாராதனைகள் நடந்துவருவதை யறிந்து அதற்குத் தக்க ஓர் ஆளைப்பிடித்து சாப்பாடு போடுவதாக ஏற்பாடு செய்து சாப்பாட்டில் மூளைக்குழப்ப மேற்படும் மருந்தை சன்யாசினியின் ஆகாரத்தில் எப்படியாவது கலந்து போடும்படி ஏற்பாடு செய்துவிட்டார்கள்.

இதை சமயல் செய்கிறவனோ, சமாராதனை செய்யும் முதலாளியோ யாரும் அறியமாட்டார்கள். சமாராதனை முடிந்ததும் சன்யாசினிக்குச் சாப்பாடு பரிமாறப்பட்டபோது வெகு விசித்திரமான சம்பவம் ஒன்று நடந்தது. சாதம் போட்ட உடனே குழம்பு பரிமாறும்போது அதில் ஒரு செத்த தேள் மிதந்து இலையில் விழுந்தது. உடனே சன்யாசினி "கிருஷ்ணா! கிருஷ்ணா! உனக்கே அர்ப்

பணம்'' என்று கூறிக்கொண்டே இலையை விட்டு எழுந்துவிட்டதோடு அன்று முற்றும் உபவாசமே இருந்துவிட்டாள்...

என்ன ஆச்சரியமாய் பகவான் காப்பாற்றிவிட்டார் பாருங்கள். இம் மாதிரி நேர்ந்த பிறகே முன் குறிப்பிட்ட சதியாலோசனைகள் முற்றும் சன்யாசினிக்குத் தெரிந்தது. அதற்குமேல்தான் சன்யாசினி ஒரு வ்ருதம் எடுத்துக்கொண்டாள். அதாவது இனிமேல் சமாராதனையோ, சாப்பாடோ, வேறெதுவோ எல்லாம் பொறுப்பான ஒரு வீட்டில் நடந்தாலும் தான் சாப்பிடுவதில்லை. தங்கள் கோஷ்டியே செய்ததாகவிருந்தால் சாப்பிடுவது என்று கங்கணங் கட்டிக்கொண்டு அதே போல் நடத்தவாரம்பித்து நடத்தியும் வருகிறாள். இன்னும் என்னென்ன சோதனைகளை க்ருஷ்ணன் செய்வானோ, அன்றி இதோடு மனமிரங்கி தன் திருவடியைத் தருவானோ தெரியவில்லை. அவன் சரணமே தஞ்சம்; அவன் நாமமே துணை. அவன் தரிசனமே ப்ரம்மாநந்தம். அவன் பஜனையே ஜீவாதாரம்......... என்பதைப் படித்து முடித்தாள்.

---

## 12-வது அதிகாரம்

## அரவத்தின் விஷம் அமிர்தமாகுமா?

இதைக் கேட்டுக்கொண்டிருந்த எல்லோருக்கும் இது ஏதோஒரு கதைபோல் தோன்றியதேயன்றி 'உண்மையில் இம்மாதிரியும் நடக்குமா இப்படியும் மனிதர்கள் இருப்பார்களா!' என்று வியப்புற்று தம்பித்தார்கள். சன்யாசினி இவைகளைக் கேட்கும்போது கண்ணீர் மட்டும் ஆறாய்ப் பெருகிக்கொண்டே இருந்தது அவளுடைய முகத்தில் சாந்தமும், அமைதியும், பொறுமையும் குடிகொண்டு ஜகஜ்ஜோதியாய் விளங்கின.

"அம்மணீ! தங்களுடைய சரிதை கல்லையும் கரையச் செய்கிறது. இத்தகைய உத்தமியின் மகிமை யறியாது மூட ஜனங்கள் தாறுமாறாக உளறுகிறார்களே! கடவுள் இதைப் பொறுப்பாரா! ஐயோ! ஒரு இளம் மங்கை படத்தக்க துயரமா தாங்கள் அனுபவித்தது? அம்மா! இப்போது வந்த புண்ணியவதி யாரோ தெரியவில்லையே!" என்று கேட்டார்கள்.

சன்யா:—தாய்மார்களே! அந்தம்மாள்தான் என் மாமியார் என்ற மகா கொடிய அரக்கி. அந்த பெண் யாரோ தெரியவில்லை. ஒருகால் அவள் இரண்டாவது மருமகளாகவும் இருக்கலாம் அன்றி மகளுடைய மருமகளாகவும் இருக்கலாம் எது எப்படியானாலும் அந்தம்மாளை நான் சதா எனக்கு குருவாகவே நினைக்கிறேன். இப்போது இங்கு பார்த்துவிட்டுச் சென்ற பிறகு இன்னும் என்ன புதிய லீலைகளைச் செய்யப்போகிறாளோ? எது செய்தாலும் என்ன நடந்தாலும் என்னப்பன் ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவின் சரணாரவிந்தந்தான் எனக்கு கதி. உலகமே ப்ரளயத்தில் மூழ்குவதாயினும் நான் இனி இம் மாய ப்ரபஞ்சச் சுழலில் அகப்படமாட்டேன்'' என்றாள். அந்த சம்பவம் அன்றோடு முடிந்து சில மாதங்களாகிவிட்டன. கிருஷ்ண ஜயந்தி உத்ஸவத்தை முன்னிட்டு பலர் கூடினார்கள்.

அச் சமயம் ஒரு பெரிய கிழவி சன்யாசியை நோக்கி "அம்மணீ! உங்கள் வைராக்யத்தைக் காண என்னிதயம் பூரிக்கிறது. 'அம்மணீ! உங்களை வெகு நாட்களாக ஒன்று கேட்கவேண்டுமென்று ஆவலாக இருந்தேன். இன்றே கேட்டுவிடுகிறேன். அதாவது என் பிள்ளைக்கு இவ்வூர் ஜெயிலில் வேலை. 200 ரூபாய் சம்பளம். ஜெயிலில் அடைபட்டுக் கிடக்கும் கைதிகளுக்கு வாரத்திற்கு இரண்டு நாட்கள் அவர்களுக்குச் சற்று மனம் நிம்மதி யடைவதற்கும், அவர்களுடைய தீய குணத்தின் தீமை அழித்து நன்மதி யூட்டுவதற்கும் நல்ல விவேகிகளைக் கொண்டு உயர்ந்த உபன்யாஸங்கள், கதைகள் முதலியன சொல்லப்பட்டு வருகின்றன.

அதற்கு சம்பளமும் உண்டு. உங்களுடைய அருமையான வைராக்ய சித்தத்தின் உயர்வும் பக்தியின் மகிமையும் என் மகன்

நன்கறிவான். ஆதலால் அந்த பேதைகளுக்கு இக் காரியத்தைச் செய்து, ஜனங்களின் அறிமையை யோட்டி அவர்களையும் மனிதர்களாக்கவேண்டுமென்று உங்களையே கேட்க ஆவல் கொண்டிருக்கிறுன். அந்த வேலைக்குத் தாங்கள் சம்மதப்பட்டால் வேண்டிய சகல ஏற்பாடுகளையும் செய்துகொடுக்கிறுன். சம்பளம் நீங்கள் ப்ரியப்பட்டால் வாங்கிக்கொள்ளுங்கள். இல்லையேல் ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவின் திவ்ய சேவைக்குக் காணிக்கையாகச் செலுத்திவிடுகிறோம். இதற்கு உங்கள் யோசனை யாதோ அதை தயவு செய்து தெரிவிக்க வேண்டுகிறேன்.'' என்று மிக்க வினயத்துடன் கேட்டாள்.

இவ் வார்த்தைகள் சன்யாசினியின் ஆச்சரியத்தைக் கிளறிவிட்டன. "நானு! ஜெயிலில் வேலை செய்வதா?'' என்று சில விநடிகள் யோசனை செய்து பார்த்தாள். ஒன்றமே தோன்றவில்லை. குழம்பிப்போய்விட்டாள். தனது ஜீவியத்தில் சில பேதைகளாவது நல் புத்தி யடைந்து, நல்வழியில் திருந்தினுர்கள் என்ற பேருதவியை யாவது செய்து அந்த சந்தோஷத்தை யடையலாமா! வென்ற யோசனையும் சிறிது ஆவலும் உண்டாகியது. அரை குறை தெரிந்தவர்களுக்கு உபதேசம் செய்தும் பலனில்லாது போவதைவிட சத் சங்கம், சத் சகவாஸம், சத் விஷயம் ஒன்றமே அறியாது சேற்றிலேயே விழுந்து புரளும் மக்களுக்கு தான் கண்ணைத் திறந்து வைக்க வேண்டும் என்ற எண்ணம் தீவிரமாக உண்டாகியதால் "சரி யோசனை செய்து சொல்கிறேன்.'' என்று கூறிவிட்டாள். அதற்கு மேல் எதுவும் பேசாமல் அந்தம்மாளும் போய்விட்டாள்.

சன்யாசினி இரவு முற்றும் இதே நினைவாக இதைப்பற்றி தனக்கொரு முடிவை யளிக்கும்படி பகவானை வேண்டிக் கொண்டிருந்தாள். 'நீ அந்த காரியத்தைச் செய்து வெற்றி பெறுவாய்' என்று மனத்தில் ஏதோ ஒன்று சொல்லிக்கொண்டே இருந்தது. இந்த குழப்பத்தில் சில தினங்கள் சென்று மறைந்தன. அதன் பிறகே சன்யாசினி தனது தீர்மானத்தைக் கிழவி யிடமும் தெரிவித்தாள். அடுத்த மாதமே சன்யாசினிக்கு வேண்டிய சவுகரியங்களைச் செய்து கொடுத்து வேலையையும் ஒப்புக் கொள்ளச் செய்தார்கள்.

சன்யாசினியும் சந்தோஷத்துடனேயே அந்த வேலையை ஒப்புக் கொண்டாள். அவளுக்கு சவுகரியத்திற்காக ஒரு ப்ரத்யேகமான மாட்டு வண்டியைக் கொடுத்திருந்தார்கள். சன்யாசினி அந்த மாட்டு வண்டியில் ப்ரயாணமாகி முதல் நாள் ஜெயிலுக்கு சென்ருள். சன்யாசினியின் தலை ஜடையையும், அவளுடைய காவி உடையையும், முகத்தின் தேஜஸையும் கண்டு ஜெயிலதிகாரிகளும் மற்றையோரும் ப்ரமித்தார்கள். அந்தம்மாளை வரவேற்று ஜெயிலுக்குள் அழைத்துச் சென்ருர்கள்.

அது ஸ்திரீகள் ஜெயிலாகையினல் கொலைக் குற்றத்திற்காகவும், திருட்டுக் குற்றத்திற்காகவும் இன்னும் பல வேறு விதமான குற்றங்களுக்காகவும் சிறை பட்டுள்ள நூற்றுக் கணக்கான ஸ்திரீகள் சற்றும் பயமோ விசனமோ, கவலையோ, அவமானமோ ஒன்றுமே இல்லாமல் இருட்டில் எதேச்சாதிகாரமாகத் திரியும் காட்டு மிருகங்களைப் போல் இருப்பதைக் கண்டு, உலகப் பற்றைத் துறந்த சன்யாசினிக்கே வியப்பு மிஞ்சி விட்டது அவள் இதையோர் வேடிக்கையைப் போல் பார்த்துக் கொண்டே வந்தாள்.

ஒரு பக்கத்தில் கைதிகளுக்குள் ஏதோ சில்லரை சண்டை உண்டாகி ஒருத்திமேல் ஒருத்தி விழுந்தும், மயிரைப் பிடித்து இழுத்தும், குத்தியும் அடித்தும் பலத்த யுத்தம் உண்டாகி தடபுடலாக நடக்கிறது. இதை வார்டர் என்ன தடுத்தும், தன் கைத்தடியால் அடித்தும் யுத்தம் நிற்கவில்லை. கூச்சலும் காதை செவிடுபடச் செய்கிறது. சண்டைக்குக் காரணம் வார்டரை விசாரித்ததில் அந்த ஜெயிலுக்கு சுண்ணும்பு அடிக்க வந்த ஆண் கைதியொருவனிடமிருந்து வெத்திலைப் பாக்கும், புகையிலைச் சுருளும் வாங்கியதையும் அதை மற்ருெருத்தி பார்த்து விட்டதால் பங்கு கேட்டதாயும் அதன் மூலம் பின்னும் சிலர் வந்து சம்மந்தப் பட்டதாயும் அதே சண்டை வலுத்து இத்தனை தூரம் வந்துவிட்டதாயும் தெரிந்தது.

கைதிகள் சற்றும் வாய் கூசாமல் "ஏ! வார்டரம்மா! அதிகமாவால் ஆட்டினு ஒங் கைத் தடியாலேயே ஒம் மண்டையெ பொளந்

துடுவேன். பத்ரம். தூரப் போ!" என்று கத்தியபடியே ஒருத்தி கைத்தடியைப் பிடுங்கி வார்டரின் மண்டையில் ஒரு அடி விட்டாள். அதே சமயம் சன்யாசினியும் மற்றயோரும் போய்ச் சேர்ந்தார்கள். சன்யாசினியே குறுக்கே பாய்ந்து அக்கைதியின் கைத்தடியைப் பிடுங்கிக் கொண்டு, அவள் கைகளை யப்படியே பிடித்து நிறுத்தி அவளை நோக்கினுள். சன்யாசினி அப்படியே திடுக்கிட்டு அலறிப் போய் நின்று விட்டாள்.

சில விநாடிகள் ஒன்றுமே தோன்றவில்லை. கையில் பிடித்த அந்த கைதியின் கையை தபாரென்று போட்டுவிட்டு பின்னர் சற்று சமாளித்தவளாய் "ஓகோ! அககா அவர்களே! இம்மாதிரி யொரு பெரும் புனித வாஸம் தங்களுக்கு என்று கிடைத்து விடுமோ வென்று பயப்பட்டுக் கொண்டிருந்தேன். கிடைத்தே விட்டதா?" என்று சன்யாசி உலகத்தையே துறந்தவளாக விருந்த போதிலும், அவளையும் மீறி அந்த சொற்கள் வந்துவிட்டன.

அன்றே புதிதாக வந்த பரம உத்தமியான சன்யாசினி அந்த கைதியைப் பார்த்து பேசிய வார்த்தைகள் மற்ற எல்லோருக்கும் மிருந்த ஆச்சரியத்தையும் பரபரப்பையும் கொடுத்தன. தலையிலடி பட்ட வார்டர் ஆத்திரமும் துக்கமும் பொங்க தன் தடியைப் பிடுங்கி அதே கைதியை தபார் தபார் என்று நாலடி அடித்த பிறகு "அம்மா! சாமியாரம்மா! இங்கிருக்கிற அத்தனை கைதிகளையும் இத்தனை நாளாக நான் கட்டி மேய்க்கிறேன்; இந்த குத்துச் சண்டையும் குஸ்தியும் நடந்த தில்லே. இந்த படுபாவி முண்டை முன்னே வேறெ ஊர் ஜெயில்லேயிருந்தாள். அங்கே அவ பண்ணுத இம்சை எல்லாம் பண்ணி சதா அடி தடியா இருக்கிறதுன்னு இங்கே அனுப்பி விட்டார்கள்.

அங்கு ஒரு வார்டருடன் சண்டை பிடித்ததற்காக 15 நாள் கைகால்கள் விலங்கு மாட்டி வைத்து தனியாகப் போட்டுப் பூட்டி இருந்தார்களாம். அதன் பிறகு தான் ஒன்றுமே செய்வ தில்லை என்று வாக்குக் கொடுத்ததும் இந்த ஊருக்கு மாத்தினர்கள். இந்த கழுதை வந்து 15 நாள்தான் ஆகிறது. என்ன அக்ரமம்!

என்ன அக்ரமம்! சொல்லவே திறமில்லை. இவளையும் ஒரு மனுஷியாக அந்த கடவுள் எப்படித்தான் படைத்தானோ! என் கண் முன்னே அகப்பட்டால் அவனை அடித்தும் விடுவேன்: வயிறெரிகிறது.

பாவி முண்டே......நாசகாலி......பணப்பேராசை பிடித்து தன் சொந்த ஓர்ப்படியைக் கொலை செய்து, நகைகளையும் பணத்தையும் திருடிக் கொண்டவள் எத்தனை நாளைக்கு வாழ முடியும்? வடிந்து விட்டது. ஊரில் எத்தனையோ பேர்கள் சாகிறார்கள். இந்த பாவி முண்டைக்கு சாவு வரக் கூடாதா! முன்னாலேயே யாரெயோ கொன்னூட்டாளாம். அது அப்படியே அமுங்கிப் போவதற்காக அண்ணன் மனைவிமேல் காட்டேரி பிடித்திருப்பதாகப் பழி கூறி காட்டேரி கொன்று விட்ட தென்று கதையைக் கட்டி, அப்பெண்ணையும் வாழ விடாது வீட்டை விட்டுத் துரத்தி விட்டாளாம். இப்பவல்ல ஒன்றா ஒன்றாக வருகிறது.

என்று கூறும்போது சன்யாசினியின் கண்ணில் நீர் மள மளவென்று வந்து விட்டது. பழங் கதைகள் முற்றும் ஒரு சுற்று சுற்றி கண் முன்பு தாண்டவமாடின. அப்படியே மவுனமாக தம்பித்து நின்று விட்டாள்: கைதியின் முகத்தில் எள்ளுங் கொள்ளும் வெடிக்கிறது. இவளுக்கும் சன்யாசிக்கும் ஏதோ சம்மந்த மிருப்பது மட்டும் மற்றையோருக்குத் தெரிநததேயன்றி என்ன சம்மந்தம் என்று தெரியவில்லை யாதலால் எல்லோரும் தம்பித்து நின்றார்கள்: அந்த கைதியும் இடி முழக்கங் கேட்ட நாகம்போல் அசைவற்று நின்று விட்டாள்.

சன்யாசினி சாந்தத்துடன் பேசத் தொடங்கி "அம்மா! வாரடரம்மா! இந்தம்மாளுடைய லீலைகள் முற்றும் நான் கண்டனுபவித்திருக்கிறேன். எனக்குப் புதிதல்ல. காட்டேரி பிடித்திருப்பதாயும் அதுவே கொலை செய்ததாகவும் பழியைக் கூறி ஒரு நிரபராதியை, சின்னஞ் சிறு பெண்ணை வீட்டை விட்டுத் துரத்திய இந்தம்மாளின் பாலை வனத்திற்கு ஒப்பான இதயத்தில் பசை என்பது இனி காண முடியுமா! இவர்களுடைய அந்த கொடிய கூற்

திற்கு இலக்கான மகா பாவி நான்தான் தாயே!...அத்தனை கருணையுடன் இவர்களும், இவர்களின் தாயாரும் சேர்ந்து என்னைச் சித்திரவதை செய்ததனால் தான் எனக்கு இத்தகைய திடசித்தமும் வைராக்யமும் உண்டாகி இகத்திற்கும், பரத்திற்கும் வேண்டிய சாரத்தைத் தேடும் பாக்கியம் கிடைத்தது. ஆகையால் இவர்களை எனக்கு குருவென்றும் நான் மனமாறக் கூறுகிறேன். என்று வெகு சாந்தத்துடன் கூறியதைக் கேட்டதும் எல்லோருக்கும் அந்த கைதியை அப்படியே நசுக்கி விடலாமா வென்ற ஆத்திரம் பொங்கியது.

மற்ற கைதிகளுக்கும், இந்த விஷயத்தைக் கேட்டதும் அந்த சண்டாளியிடம் வெறுப்பும் அத்ருப்தியும் உதித்தது. இதற்குள் ஜெயலர் அந்த கைதியை விலங்கிட்டு ஒண்டிக் கொட்டடியில் அடைத்து விடும்படி உத்திரவிட்டு விட்டார். உடனே அவளை அவ்விதமே செய்யப்பட்டது. வழக்கம்போல் கதை சொல்வதற்கு இன்று வேறு சாமியாரம்மாள் வரப்போகிறார்கள் என்ற விஷயம் எல்லா கைதிகளுக்கும் தெரியுமாதலால் அந்த சாமியார் அம்மாளைத் தெரிந்து கொண்டார்கள். சிலர் கைதியாக விருந்த போதிலும் நல்ல குணமும், நல்லொழுக்கமும் பெற்று தாம் செய்து விட்ட தவறுதலையுணர்ந்து அதற்கு விமோசனம் கிடைக்குமா, பாவம் தீருமா, மறு பிறவியிலாவது நல்ல ஜென்மம் கிடைக்குமா! வென்று ஏங்கி வருந்தி சாமியாரம்மாளின் காலில் விழுந்து வணங்கி "யம்மா! தாயே! எங்க போராத வேளையாலெ ஏதோ கெட்டுப்போய் தப்பு சேஞ்சுப்புட்டு வந்துட்டோம். எங்க தலையெழுத்து இப்பிடியாய் பூட்டுதுங்க. எங்க பாவம் தீர ஏதாச்சும் நல்ல கதை சொல்லுங்க. எங்க பாழுங் காதிலெ நல்ல விஷயமாவது உழட்டும்." என்று கத்தினார்கள்.

வழக்கம்போல் கதை சொல்லும் இடத்திற்கு எல்லோரும் வந்து அமர்ந்தார்கள்; சில கைதிகள் கதையும் வாணும்; காரணமும் வாணும். தூங்கினாலும் ப்ரயோசனமுண்டு" என்று கூறி விலகிச் சென்றார்கள். சன்யாசினி மிகுந்த வணக்கமும் இந்த கைதிகளிடத்தில் ஒருவிதமான இரக்கமுங் கொண்டு பேசத் தொடங்கி.........

"உங்கள் அத்தனை பெயர்களையும் பார்க்கும் போதே உண்மையில் என் மனம் டீகிரென்கிறது. உங்கள் முகத்தைப் பார்ப்பதும் வெகு பாவம் என்று தோன்றுகிறது. இருப்பினும், சறுக்கி கீழே விழுந்து காயம் பட்டாலும் சரி, வேண்டு மென்று விழுந்து அடிபட்டாலும் சரி அதற்கு ஒரே மாதிரி வைத்தியம் செய்துதான் நிவர்த்தி செய்யவேண்டி இருக்கிறது.

அதே போல் துணிகளை வேண்டுமென்று சேற்றில் புரட்டினாலும் சரி, தானாகவே மண் மாரியும், தூசியும் படிந்து அழுக்காக்கி விடினும் சரி அவைகளை ஒரே மாதிரிதான் சலவை செய்து வெளுக்க வேண்டி இருக்கிறது. வேண்டு மென்று தீயை மூட்டிப் பற்ற வைத்தாலும் சரி, தானாகப் பற்றிக் கொண்டாலும் சரி ஒரே தண்ணீரைக் கொட்டித்தான் அணைக்க வேண்டி இருக்கிறது. அது போல் இங்குள்ளவர்களில் அனேகர் வேண்டு மென்றே குற்றம் செய்து விட்டு வந்தவர்களாக விருக்கலாம், ஒரு சிலர் காலக் கொடுமையால் தான் குற்றம் செய்ததாக சிக்கிக் கொண்டு வந்திருக்கலாம். பலவிதமாக விருப்பினும் எல்லோரும் நீங்கள் அடைய வேண்டிய பதவியை அறிந்து கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறீர்கள்.

நீங்கள் முதலில் தெரிந்து கொள்ள வேண்டியது யாதெனில் நாம் இப்போது கொடும் பாவிகளாக விருக்கிறோம். இப்பெரும் பாபத்தை நீக்கி கடவுளால் மன்னிக்கப் பட வேண்டும்'' என்ற உணர்ச்சியைப் பெறுவது தானாகும். இதற்கு ஒரு பக்தனின் கதையைச் சொல்கிறேன் கேளுங்கள்." என்று பில்வமங்களின் சரித்திரத்தைக் கூறி, அவன் அக்ரமங்கள் செய்து விட்ட போதிலும் பின்னர் மனம் நொந்து எவ்விதம் பகவத் பக்தியிலீடுபட்டு பக்தி செய்து முக்தியடைந்தானே, அம்மாதிரி நீங்களும் உங்கள் பாவம் தீர பகவானை வேண்டி பஜனை செய்து முக்தியடைய வழி தேட வேண்டும்'' என்றாள். இம்மாதிரியே வாரம் இரு முறை ஒரு தினம் கதையும், ஒரு தினம் பாட்டுமாக சொல்ல வாரம்பித்தாள்.

அந்த கைதிகளுக்கு இந்த சன்யாசினி சொல்லும் கதைகளினாலும் பாட்டுகளினாலும் பரம த்ருப்தியும் சந்தோஷமும் உண்டாகி

யது. அவர்களில் சில புத்திசாலிக் கைதிகள் விஷயங்களை கிரகித்துக் கொண்டு சிற் சில கேள்விகளும் கேட்கவாரம்பித்தார்கள். இது சன்னியாசினிக்கு பின்னும் சந்தோஷத்தைக் கொடுத்தது. சன்யாசினியின் வரவை கைதிகள் அபாரமான சந்தோஷத்துடன் எதிர்பார்க்க வாரம்பித்தார்கள். சன்யாசினியின் மீது ஜெயிலருக்கும் மற்ற எல்லோருக்கும் மதிப்பும், நம்பிக்கையும் அதிகமாக ஆக சன்னியாசினியின் நாத்தனாராகிய கைதியின் மீது ஆத்திரமும் வெறுப்பும் அதிகரித்தது.

அவளை வெகு நாட்கள் வரையில் தனிக் கொட்டடியிலேயே போட்டுப் பூட்டி விட்டபடியால் அவளுக்கு வெறி பிடித்தது போலாகி விட்டது. இனிமேல் இம்மாதிரி ஏதும் சண்டை போடுவதில்லை என்று வாக்கு கொடுத்த பிறகு அவளை வெளியில் விட்டார்கள். அது முதல் அவளும் கதை கேட்க வந்து உட்காரவாரம்பித்தாள். சன்னியாசினி அவளுடன் பேசவோ பார்க்கவோ ஒன்றுமே இல்லை. தன் காரியம் உண்டு, தான் உண்டு என்ற நிலைமையில் இருந்தாள்.

அன்று பாட்டு பாடும் முறை நாள் ஆகையினால் சன்யாசினி எல்லாக் கைதிகளுக்கும் அன்று புதிய பாட்டு ஆரம்பித்துச் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்தாள். அச்சமயம் இது காறும் சாது போல் உட்கார்ந்திருந்த அந்த நாத்தனார் கைதி பாடிக்கொண்டே இருந்த சன்யாசினியின் தலையில் பட்டாரென்று, யாரும் எதிர்பார்க்காமல் ப்ரமிக்கும்படி அருகிலிருந்த கட்டையினால் ஓங்கி அடித்து விட்டாள்.

சன்யாசினி இந்த எதிர்பார்க்காத விபரீத சம்பவத்தினால் "ஹா! கிருஷ்ணா! கிருஷ்ணா!" என்று கூவிக் கொண்டே கீழே சாய்ந்தாள். அடுத்த அந்த நிமிஷமே அந்த கைதியை எல்லோரும் பிடித்துக் கொள்ள எண்ணியும் முயன்றும் முடியாமல் மன அதிர்ச்சியினால் தம்பித்து ஒன்றுமே தோன்றாது போய்விட்டார்கள். எனினும் அடுத்த க்ஷணமே பார்க்கும்போது கைதியைக் காணவில்லை. உடனே பெரிய பர பரப்பும் குழப்பமும் ஏற்பட்டு விட்டன. சிலர்

கைதியைத் தேடிக் கொண்டு ஓடினார்கள். சிலர் சன்யாசினியின் நிலைமையைக் கண்டு பரிதாபப் பட்டுப் பதறினார்கள். பாம்பின் விஷம் என்றுமே விஷமல்லாமல் அமிருதமாக முடியுமா?

---

## 13—வது அதிகாரம்

### நாற்றக் குப்பையும் நய வஞ்சகச் சூழ்ச்சியும்

அகத்தினழகு முகத்தில் தெரியும் என்பது பழமொழி யல்லவா? அங்கு வந்து நிற்கும் நர்ஸுகளின் முகத்தைப் பார்க்கும் போதே அவர்களின் க்ரூர எண்ணமும், கொடிய வஞ்சமும் பார்வையின் மூலம் தெரிந்து விட்டது. சௌதாமினி பயந்து நடுங்கி வெறுப்புடன் நிற்பதைக் கண்ட ஹரிநாத்திற்கு அவர்களின் மீது கோபமும் சௌதாமினியின் மீது அபாரமான பச்சாத்தாபமும் உண்டாகி விட்டன உடனே அவன் வந்த நர்ஸ்களை நோக்கி சற்றும் பயப்படாமல் "என்ன சமாச்சாரம்! எங்கே வந்தீர்கள். இன்னும் ஏதாவது புதிய சரக்குகள் மூட்டை கட்டிக்கொண்டு வந்திருக்கிறீர்களா! அப்படியானல் மூட்டையை அவிழ்த்து விட்டுச் செல்லுங்கள் இங்கு நிற்க வேண்டாம்" என்று வெடுக்கெனக் கூறினன்.

இவ்வார்த்தைகளைக் கேட்டு வியந்து போய்விட்ட நர்ஸ்கள் சௌதாமினியை நோக்கி "சௌதாமினி! இதோ அழைப்புக் கடிதம். நாளைய தினம் டீ பார்டிக்கு நீ வரவேண்டும். தெய்வசிகாமணியம்மாள் இந்த ஊருக்கு வந்திருக்கிறார்கள் அவர்களுக்கு டீ பார்டி நடக்கிறது. அதற்கு உன்னை யழைக்க வந்தோம்" என்று கடிதத்தை நீட்டினார்கள். ஹரிநாத்தை விரைக்க விரைக்க ஒரு பார்வை பார்த்து விட்டு முடுக்காகப் போய் விட்டார்கள்.

ஹரிநாத் அக்கடிதத்தைப் பிரித்துப் பார்த்தான். அதில் தெய்வசிகாமணியம்மாளுக்கு இவர்களெல்லாம் டீ பார்டி கொடுப்ப தாயும், அந்த வரிசையில் தன் மனைவியின் பெயரும் இருப்பதைக் கண்டு மனம் பதறியது. கண்கள் சிவந்தன. இவனுடைய மாறுதலைக் கண்ட சௌதாமினி ஹரிநாத்தை நோக்கி "டாக்டர்! ஏன் இக்கடி தத்தைப் படித்த உடனே உங்கள் முகம் ஒருமாதிரியாகி விட்டது? என்ன விஷயம்?" என்று வெகு வாஞ்சையுடனும், ஆவலுடனும் கேட்டாள்.

ஹரி:—சௌதாமினி! எல்லாம் என் தலை விதியின் விசேஷந் தான்; வேறு ஒன்றுமில்லை. இந்த தெய்வ சிகாமணி என்றவள் மகா கெட்டுப்போன கழுதை. அவள் புருஷனுக்கே அவளுடைய ஊழல் தெரிந்து அவளை விட்டுத் தள்ளிவிட்டு அவன் கண் காணாது ஓடி விட்டான் அவன் சென்ற பிறகு அந்தப் பெண் சினிமா நக்ஷத்திரமாகி இப்போது சினிமா ரஸிகர்களால் புகழப் பட்டு வருகிறாள். அந்த கழுதைக்கு டீ பார்டியாம். பார்டி கொடுக்கும் ஜாபிதாவில் என் காலில் கட்டி இருக்கும் அவள் பெயரும் வந் திருக்கிறது. என்ன அவமானம்? அவளுடைய தைரியத்தைப் பார்த்தாயா!......எனக்குத் தலை குனிவாயிருக்கிறதே......பார்டி கொடுப்பதற்கும் எத்தனையோ யோக்யதை யுடைய பெண்மணிகள் இல்லையா?.........அல்லது சினிமா நக்ஷத்திரங்களிலேயே சற்று மதிப்பு வாய்ந்தவர்கள் கிடைக்க வில்லையா......ஐயோ!.........என் தலைவிதி.........நான் பண்ணிய கர்மம். இன்னொரின் மனைவி இன் னொருக்கு பார்டி கொடுத்தாள் என்றால் பார்ப்பவர்கள் என்ன நினைப்பார்கள்?.......

சௌதா.—என்ன டாக்டர்! உங்களைக் கேட்காமலா அந்தம் மாள் செய்கிறார்கள்? இதற்கு அவர்களின் பெற்றோர்கள் சம்மதப் படுகிறார்களா!...

ஹரி:—சௌதாமினீ! என்னைக் கேட்பதா!...நானும் அவளும் பிறர் கண்களுக்குப் புருஷன் மனைவி என்ற பெயரே யன்றி, அந்த ரங்கமான அன்பினாலோ வாழ்க்கையின் நடத்தையினாலோ

வேறெந்த விதத்திலும் அவள் யாரோ, நான் யாரோ? அவளும் நானும் சரியானபடி பேசியது கூட இன்று பரியந்தம் கிடையாது. ஊம்......இந்த கதைகளெல்லாம் எதற்கு?......விதிதான் வலிது...

சௌதா.—ஏன் டாக்டர்! அந்தம்மாளுக்கு உங்களிடம் அன்பு கிடையாதா!.........உங்களுடைய சேவைகளைச் செய்வதற்கு அவர்களுக்குக் கிடைத்திருக்கும் பாக்யத்தை உணர்வதில்லையா! அதைப் பயன் படுத்திக் கொள்வதில்லையா! உங்கள் வேலையையும் செய்யாமல் உங்களுடன் பேசுவதுமில்லாமல் அந்தம்மாள் வேறு என்னதான செய்கிறார்கள்?

ஹரி:—ஐயோ!......சௌதாமினி! இதை எல்லாம் நீ என்னைக் கேட்காதே. நிமிடத்திற்கு நிமிடம் என் மனது படும் வேதனையால் இதயம் வெடித்து விடும் போலிருக்கிறது· அவள் என்ன செய்கிறாள் என்றதை நான் ஏன் கவனிக்கிறேன்? அவளுடைய சில சகாக்களுடன் தினந்தோறும் தவறாமல் சினிமாவுக்குச் செல்வதை மட்டுந்தான் நான் பார்க்கிறேன். மற்றவை எனக்குத் தெரியாது. எல்லா சனியனும் மறக்கும் பொருட்டுத்தான் நான் கண் மறைவாக வெளி நாட்டுக்குப் போய் விடுகிறேன். கொஞ்ச காலமாவது நிம்மதியாக விருந்து பின்னர் திரும்பி வருகிறேன். என் வாழ்க்கைக்கு எங்கிருப்பினும் அமைதி என்பது கிடையாது. இக் கட்டை எங்கிருந்தால் தான் என்ன? என்னுடைய தொழிலிலாவது நற்பெயரெடுத்தால் போதும் என்று நான் பாடுபடுகிறேன்......

சரி,......நிரம்ப நேரமாகி விட்டது. நான் சென்று வருகிறேன்; ஞாபகமிருக்கட்டும். திரும்பி வந்து பார்க்கிறேன். எனக்கு உத்திரவு கொடு'' என்று கூறியபடியே, சௌதாமினியை உற்று நோக்கினான். அவள் அழகிய முகத்தில் விசனமே நிறைந்து நகைப்புடன் ஜொலித்தது. கண்ணீர் குளம்போல் முட்டியது. தன்னை மீறிய அன்புடன் "நல்லது. டாக்டர்! போய் வாருங்கள். உங்கள் உடம்பை ஜாக்ரதையாய்ப் பார்த்துக் கொள்ளுங்கள். பரீக்ஷை முடிந்த உடனே திரும்பி வந்து விடுங்கள். உங்களுக்கு பெருமிதமான வெற்றி கிடைக்கும்படி பகவானை ப்ரார்த்திக்கிறேன். தாதா வந்ததும் சொல்கிறேன். உங்களால் முடியுமானால் கடிதம் போடுங்கள்.

ஹரி:—அப்படியே போடுகிறேன். சௌதாமினி! நீ அந்த நர்ஸ்களுடன் ஒருபோதும் சேராதே. உனக்குத் தனித்த கேஸ்கள் வந்தால் சென்று உன் கடமையைச் செய்துவிட்டு வீட்டுடன் இரு. அனுவசியமாய் ஒருவருடனும் உனக்குச் சகவாஸமே வேண்டாம். உனக்குள்ள துயரங்கள் போதும். இனியும் விலைக்கு வாங்காதே. உனக்கு எந்த டீ பார்டியும், டின்னர் பார்டியும் வேண்டாம். சிவனே என்றிரு. நான் வருகிறேன்......கோகிலா வந்ததும் சொல்லிவிடு— என்று கூறியவாறு சௌதாமினியின் இரு கரங்களையும் பிடித்து கண்ணில் ஒற்றிக்கொண்டு சில விநாடிகள் ப்ரமித்து நின்று அடுத்த நிமிடமே மறைந்துவிட்டான். இரு பறவைகளில் ஒரு பறவை பறந்துவிட்டது. எங்கும் அந்தகாரமான இருள் சூழ்ந்துவிட்டது போல் சௌதாமினியின் நிலைமை ஆய்விட்டது. ஹரிநாத்தின் கார் மறையும் ஓசையே ஓர் இன்பமாகத் தோன்றி அதுவும் மறைந்து துன்பமாக ஆய்விட்டது. தன் போக்காகப் படுத்துவிட்டாள்.

அதற்குப் பிறகு இப்போது சில மாதங்களாகிவிட்டன. ஹரி நாத்திடமிருந்து சௌதாமினிக்கு இரண்டொரு கடிதங்கள் வந்தன. அதை யறிந்த கிழவர் கடிதம் வருவது கூடாதென்று கண்டித்து சௌதாமினியைத் திட்டியதால் மகா புத்திசாலியாகிய சௌதாமினி கடிதம் எழுதவேண்டாமென்று நிறுத்திவிட்டாள். கடித சந்திப்பும் அற்றுவிட்டது. தன் வேலையுண்டு தானுண்டு என்று மிகுந்த ஒழுக்கத்துடனும், பொறுமையுடனும், தன் தொழிலைச் செய்து வருவதால் இவளிடம் பொது ஜனங்களின் அபிமானம் தினே தினே விருத்தியாகிவிட்டது. அடிக்கடி கேஸ்கள் வர வாரம்பித்தன. எல்லோரும் இவளையே நல்லவள், கைராசிக்காரி என்று மதிப்புடன் கூப்பிட வாரம்பித்தார்கள்.

ஆஸ்பத்திரியிலிருந்து தள்ளப்பட்டும் இவளுடைய புகழ் குன்றாமல் ஜொலிப்பதால் மற்ற நான்கு நர்ஸ்களுக்கும் வயிற்றெரிச்சல் அதிகரித்துக்கொண்டே வந்தது. ஆனால் தங்களுக்குமேல் பலாபலன்களைக் கொடுக்கும் கடவுள் ஒருவன் இருக்கிறான் என்ற எண்ணமே இல்லாதிருக்கும் இருமாப்பு படைத்தவர்களின் கொழுப்பையும் கடவுள் அடக்காதிருப்பாரா! தன் வினை, தன்னையே சுடும் என்ற பழமொழி வீணாகுமா!

நிரபராதியான சௌதாமினியை அபாண்ட குற்றத்தைச் சாட்டி வெளியேற்றிவிட்டு எந்த பெரிய டாக்டரின் பேரன்பையும் பெரு மதிப்பையும் பெற நினைத்தார்களோ, அதே பெரிய டாக்டரிடம் இவர்கள் ஒரு பெரிய கேஸில் கூட வேலை செய்யும்போது நோயாளியைத் தூக்கிப் படுக்கையில் கிடத்தும் பொருட்டு எடுத்துத் தூக்கி விடும்போது நோயாளி ரெட்டை நாடியான பாரி சரீரமுடையவளாகையால் தூக்கமாட்டாமலும், தடுக்கியும் கை விட்டு விட்டதால் நோயாளி தபார் என்று கீழே விழுந்துவிட நேரிட்டு விட்டது. இது பெரிய டாக்டரின் எதிரில் கையும் மெய்யுமாய் இவர்கள் ஒரு சிறிதும் எதிர் பார்க்காமல் நேர்ந்துவிட்டது.

எளியாரை வலியார் அடித்தால் அவ் வலியாரை தெய்வமடிக்கும் என்ற பழமொழி வீணுகுமா! அந்த ஒரே சம்பவத்தால் நால்வரும் ஆஸ்பத்திரியிலிருந்து அப்போதே வெளியேற்றப்பட்டார்கள். சௌதாமினிக்காவது தனித் தொழில் செய்ய ஹரிநாத் சர்டிபிகேட்டு வாங்கிக் கொடுத்தான். இவர்களுக்கு அதுவும் இல்லாது நடுச் சந்தி நாராயணுவென்று விடப்பட்டார்கள். அந்த நோயாளி உடனே இறந்தும் போய்விட்டதால் நர்ஸ்களின் பாடு கேஸில் சிக்காமல் விடப்பட்டால் போதும் என்ற நிலைமைக்கு வந்துவிட்டது.

எதேச்சாதிகாரமாகப் பிழைத்தவர்களுக்கு இத் தகைய கஷ்டம் ஏற்பட்டுவிட்ட பின்னர் சௌதாமினியின் பசியாது புசிக்கும் நிலைமையைக் கண்டு அவர்களால் எப்படி வயிற்றெரிச்சல் படாதிருக்க முடியும்? அவர்களும் யாரை யாரையோ பிடித்து கஜகர்ணம் கோகர்ணம் போட்டுத் தங்களுக்கு நற்சாக்ஷிப் பத்திரம் ஆஸ்பத்திரியிலிருந்து கிடைக்கப் பார்த்ததெல்லாம் பயனற்றது. அந்த பொருமையினுல் பின்னும் விஷம புத்தியும் விஷமத்தனமும் அதிகரித்ததேயன்றி குறையவில்லை. இந்த நர்ஸ்களின் விஷயத்தை அறிந்த சௌதாமினி உண்மையில் விசனித்து இதனுல் தனக்கு என்ன நேர்ந்துவிடுமோ வென்று பயந்தாளேயன்றி சந்தோஷப் படவில்லை.

சௌதாமினியின் மீது எப்படியாவது அத்ருப்தியை ஜனங்களுக்கு உண்டாக்கவேண்டுமென்ற எண்ணங்கொண்டு அவர்கள் சதியாலோசனை செய்து சமயம் பார்த்துக்கொண்டிருந்தார்கள். சௌதாமினி ஓர் பெரிய ஜமிந்தார் வீட்டு செல்வச் சீமாட்டியின் மிகவும் ஆபத்தான நிலைமையில் இரவு, பகல் அருகிலேயே இருந்து கவனிக்கும் பொறுப்பை ஏற்றுக் கவனித்து வருவதை யறிந்த இந்த பொறாமைப் பேய்கள் யாரையோ ஒரு சோதாப் பையனை பிடித்து இந்த சீமாட்டியின் வீட்டிற்கு அனுப்பி சௌதாமினி முக்யமாய் நோயாளிக்கு ஐஸ் வைப்பதும், உடம்பிற்கு மருந்து போட்டு தேய்ப்பதும், நோயாளியினுடைய குழந்தையை கவனிப்பதுமாக விருக்கையில் அங்கு வந்து, கோகிலா மோட்டாரில் அகப்பட்டுக்கொண்டதாயும், மிகவும் விபரீதமாக அடிபட்டு ஸ்மரணையற்றுவிட்டதாயும் உடனே ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோய்விட்டதாயும் தகவல் கூறி விட்டுச் செல்லச் செய்தார்கள்.

பேரிடி தன் தலையிலேயே விழப்பெற்றவள்போல் சௌதாமினி துள்ளினுள். தன்னருமைத் தங்கையின் உயிர் போய்விட்டதாகவே அவளுடைய இதயம் துடிக்கிறது. என்ன செய்வாள் பாவம்! அந்த சீமாட்டியின் நிலைமையோ மிகவும் கேவலமாகிவிட்டது. வேறு யாரும் கவனிக்கும் திறமையுடையவர்கள் கிடையாது. இன்னிலைமையில் இதை விட்டுச் செல்வதா, அன்றி தங்கையைப் பார்க்காதிருப்பதா வென்ற பெருங் குழப்பமும், துக்கமும் பொங்கி விட்டது.

சில வினாடிகள் விசனம் தாங்காமல் அப்படியே தம்பித்துவிட்டாள். உடனே தன் தங்கையைத் தான் பார்க்கவேண்டும்; தனக்கு அதுதான் முக்யம் இந்த சேவகமில்லாவிட்டால் போகிறது. சொல்லிவிட்டுப் போய்விடவேண்டுமென்ற தீவிரமான ஆவேச எண்ணம் உதித்தது. மனந்துடித்தவாறு வெளியில் ஓடி வந்து அவ் வீட்டு எஜமானிடம் சென்றாள். எஜமானன் மனைவியின் தேக நிலைமைக்காக மிகவும் வருந்திக் கண்ணீர்விட்டுக்கொண்டிருப்பதைக் கண்டாள். இன்னிலைமையில் தான் எவ்விதம் செல்வது என்ற

ஒரு அச்சமும் உண்டாகியது. என்ன செய்வதென்று சிறிது நேரம் தியங்கினுள். மனத் துயரம் பெருகி வதைப்பதால் "ஐயா!" என்று மிகுந்த வணக்கமாயும், மரியாதையாயும் அழைத்ததைக் கேட்டு எஜமான் திரும்பிப் பார்த்தார். தன் மனைவிக்குத் தான் ஏதோ வந்துவிட்டது என்று தெரிவிக்க வந்திருப்பதாக எண்ணி நடுங்கியபடி "என்னம்மா! என்ன சமாச்சாரம்? என்ன வேண்டும்?" என்று கேட்டார்.

சௌதா :—(தியங்கித் தியங்கி தழதழத்த குரலில் பேசத் தொடங்கி) ஐயா! எனக்கு இருக்கும் ஒரே தங்கை திடீரென்று மோட்டார் காரில் அகப்பட்டுக்கொண்டுவிட்டதாம். அவளை ஆஸ் பத்திரியில் கொண்டுவிட்டிருக்கிறதாம். நான் உடனே சென்று பார்த்துவிட்டு வருகிறேன். சற்று தயவு செய்து கார் கொடுத்து உத்திரவும் கொடுக்கவேண்டும்—என்றுள்.

இதைக் கேட்டதும் அம் மனிதர் திடுக்கிட்டவராய் "என் னம்மா இது? இத் தகவல் உனக்கு யார் தெரிவித்தது? நான் இப் போதுதான் 10 நிமிடத்திற்கு முன்பு உன் தங்கை பள்ளிக்கூ த் துப் பெண்களுடன் விளையாடுவதைப் பார்த்தேனே. இதற்குள் இத்தனையும் நடந்துவிட்டதாக உனக்கு யார் சொல்லியது?" என்று வியப்புடன் கேட்டார்.

சௌதாமினி :—யார் என்று எனக்குத் தெரியாது. 10 நிமிடத் திற்குள்தான் எனக்கு ஒருவன் வந்து சொன்னுன். அதுமுதல மனம் பதைக்கிறது. நான் சென்று பார்த்துவிட்டு வந்துவிடுகி றேன்"—என்றுள். அதே சமயம் கோகிலா விரைக்க விரைக்க ஓடி வந்து "அக்கா! அக்கா!" என்று கூவிக்கொண்டே வரும் த்வனி சௌதாமினியின் காதில் பட்டதும் அவளுக்கு அம்ருததாரை வார்த்ததுபோல் தோன்றி பரமாநந்தத்தைக் கொடுத்தது.

அந்த த்வனியைக் கேட்டு வரும்போது கோகிலா எதிரில் ஓடி வந்து "அக்கா! அக்கா! நீ! உசிரோடே இருக்கயா?" என்று விக்கி விக்கி அழுதாள். சௌதாமினி அவள் அழும் காரணம் தெரியாமல்

விழித்தபடியே கோகிலாவைத் தேத்தி "என்னம்மா! ஏன் அழுகிறாய்? நடந்த விஷயமென்ன?" என்று கேட்டாள்.

கோகிலா :—அக்கா!...சத்தை முன்னே யாரோ ஒத்தன் வந்து நீ மோட்டாருலே ஆட்டுண்டுட்டேன்னு ஒன்னெ ஆஸ்பத்திரிலெ கொண்டு போட்டுட்டான்னு தாத்தாகிட்டெ சொன்னான்....தாதா அப்படியே அழுதுண்டு கீழ விழுந்துட்டா! எனக்கு ஒன்னுமே தெரியல்லே!...நீ இங்கே வேலெக்கி வந்த ஞாபகம் வந்தது. ஓடனே ஓடி வந்தேன்...நீ இப்பவே ஆத்துக்கு வா....இல்லாட்டா தாத்தா செத்துப்போயிடுவா...என்று அழுதாள்.

இதை கேட்ட பிறகு சௌதாமினிக்கு இது முற்றும் தன் எதிரிகள் செய்த சூழ்ச்சி என்று புலப்பட்டுவிட்டது. இதைக் கேட்ட அந்த எஜமானுக்கு மனமிளகியது. உடனே அவர் காரில் சென்று கிழவரை யழைத்துவந்து இவளை நேரில் காட்டி இது முற்றும் எதிரிகளின் சூழ்ச்சி சற்றும் பயப்படவேண்டாம், என் சம்சாரத்திற்கு உடம்பு குணமாகும் வரையில் எங்களுக்கும் பெரிய துணையாகவிருக்கும். என் குழந்தைகளுக்கும் விளையாட்டுத் துணையாக கோகிலா இருப்பாள். ஆகையால் இங்கேயே இருந்து விடுங்கள்" என்று கூறி இருவரையும் தன் வீட்டிலேயே வைத்துக் கொண்டார்.

இந்த செய்தியும் தெரிந்த பிறகு அந்த நர்ஸ்களின் ஆத்திரம் அதிகரித்தது. என்ன செய்யலாமென்ற யோசனையிலேயே இருந்தார்கள். ஜமீந்தாரிணியின் உடம்பு நன்றாகக் குணமாகிவிட்ட பிறகு சௌதாமினி வீட்டிற்கே வந்துவிட்டாள். சில தினங்களுக்குப் பிறகு ஒரு தினம் சௌதாமினியை அவசரமாக ஹரிநாத்தின் மாமன் அழைப்பதாக ஆள் வந்ததைக் கேட்டு சௌதாமினி மிக்க வியப்புற்று அங்கு சென்றாள். ஹரிநாத்தின் மாமனும், மாமியும் வாடிய முகமும், வடிந்த கண்ணீருமாக உட்கார்ந்திருந்தார்கள். சௌதாமினியைக் கண்டதும் விசனித்தபடியே "அம்மா! டாக்டர் முருகேசம் உன்னை இங்கு நர்ஸ் பண்ணும்படியாகக் கூறிச் சென்றிருக்கிறார். என் மகள் ஊர்மிளாவுக்கு அதிகமாக ஜுரமடிக்கிறது. 105 டிகிரியாகிவிட்டது. இதோ ஐஸ் "என்று கூறினர்...

உடனே சௌதாமினி மனக் கலக்கத்துடன் ஐஸை எடுத்துக் கொண்டு உள்ளே சென்று தன் தொழிலை ஆரம்பித்தாள். ஊர்மிளாவுக்கு ஜுரவேகம் தாங்க முடியாது புரட்டுகிறது. பெரியதாகச் சத்தமிட்டு அலட்டுகிறாள். அவள் படுத்திருக்கும் அறையில் ஹரிநாத்தின் புகைப்படம் பெரிதாக மாட்டி இருப்பதைக் கண்டு சௌதாமினிக்கு ஹரிநாத்தை நேரிலேயே காண்பதுபோலான சந்தோஷமும், ஒருவிதமான புதிய சக்தியும் அவள் மனத்தில் பொங்கி எழுந்தன. நோயாளியை தன் கடமை வழுவாது கவனித்துக் கொண்டே அப் படத்தையும் கண்ணிமை கொட்டாது பார்த்துக் கொண்டிருந்தாள்.

இப்படியே இரண்டு நாட்களாகியும், ஜுரம் குறையவில்லை. இதைக் கண்ட பெரிய டாக்டருக்கு பயமாகவே தோன்றியது. சௌதாமினிக்கோ ஒரு தினம் செல்ல மறு தினமே அவள் திடுக்கிடும்படியான ஓர் புதிய மாறுதலையும் விபரீதத்தையும் நோயாளியிடம் கண்டதும் அவள் கதி கலங்கியது "இதை யாரிடம் கூறுவது. எப்படி இச் செய்தியை வெளிப்படுத்துவது? ஐயோ! அனியாயமே! கடவுள் இப்படியுமா சோதனை செய்வார்?" என்ற திகில் பிடித்துக் கொண்டது. தத்தளித்துக்கொண்டே "இதை எப்படியும் பெரிய டாக்டரிடம் தெரிவித்துவிடுவதா! அன்றி அவளிடமே கேட்டறிவதா!" என்ற குழப்பமுண்டாகிவிட்டது.

மெல்ல மனத்தை திடப்படுத்திக்கொண்டு ஊர்மிளாவையே சமயம் பார்த்து கேட்பது என்று எண்ணினாள். இதற்குள் ஊர்மிளாவே சற்று தெளிவு பெற்று சுற்று முற்றும் பார்த்தாள். "அம்மா! இப்படி அருகில் வா" என்று சைகை காட்டினாள். மிகுந்த வியப்புடன் சௌதாமினி அவளருகில் வந்து "ஏனம்மா! என்ன வேண்டும்?" என்று நயமாகக் கேட்டாள், ஊர்மிளா சற்று முற்றும் பார்த்துவிட்டு "நான் ஒன்று கேட்கிறேன்; எனக்கு அதைச் கொடுக்க வேண்டும். அப்படியே செய்வதாக எனக்கு வாக்குறுதி கொடுக்க வேண்டும். அதன் பிறகுதான் சொல்லுவேன்." என்று பரிதாபமாகக் கேட்டாள்.

அப்படி கேட்கும்போதே சிறிது சந்தேகம் தட்டிய சௌதாமினி" அம்மணி! என்னால் செய்ய முடிந்ததைக் கட்டாயம் செய்கிறேன். அவச்யம் நம்பிக்கையுடன் கேளுங்கள்" என்றாள். ஊர்மிளா அவளிரு கைகளையும் பிடித்துக்கொண்டு" தாயே! உங்களைப்பற்றி எனக்கு எதுவுமே தெரியாது. எனினும் உங்கள் தொழில் முறையில் நீங்கள் இந்த உதவி செய்ய முடியுமென்று நம்பி சொல்லுகிறேன். சத்தியமாக இதை நீங்கள் வெளியிடக்கூடாது என் தலைவிதியின் கொடுமையால் எனக்கு இப்போது 4 மாதமாகிவிட்டது.

என் பர்த்தா ஊருக்குச் சென்று 6 மாதங்களுக்குமேலாகிவிட்டது. இந்த விஷயம் வெளியில் தெரியமாயின் என் ப்ராணனையே விட வேண்டியதுதான். ஆகையினால் எனக்குத் தெரிந்த ஒரு சில்லரை நர்ஸிடம் ஏதோ மருந்து வாங்கி சாப்பிட்டதில் குணத்திற்கு வழி இல்லாது இப்படி விபரீதமாகிவிட்டது.

என் புருஷனுக்கும் எனக்கும் அநேக விதங்களில் மனப் பொருத்தமே கிடையாது. அவருடைய போக்கே எனக்குப் பிடிப்ப தில்லை. அவருக்கும் எனக்கும் அன்யோன்ய பாவமே கிடையாத தின் விளைவால் இக்கதி ஏற்பட்டது. நானும் அதை லக்ஷ்யம் செய்யாது போய்விடுவேன். என்னுடைய பெற்றோர்கள் என்னையே நம்பிக்கொண்டு இருப்பதால் அவர்களுக்காக நான் நடிக்கவேண்டி இருக்கிறது. உன்னை என் உடன்பிறப்புபோல் பாவித்து இந்த ரகஸ்யங்களைச் சொல்லிவிட்டேன். இதை யொழிப்பதற்கு நீதான் கட்டாயம் மருந்து கொடுக்கவேண்டும். இந்த விஷயத்தில் நீ எனக்குச் செய்யும் உபகாரத்திற்கு நான் தக்க சன்மானங் கொடுப் பேன். சுமார் 5 ஆயிரம் ரூபாய் பெறுமான வைர மாலையைக் கொடுத்து விடுகிறேன். அதை விற்று நீ எடுத்துக்கொள்ளு என்னை இம்முறை காப்பாற்றவேண்டும்'' என்று கெஞ்சினாள்.

இம்மாதிரி விஷயத்தைப்பற்றித்தான் கேட்கப் போகிறாள் என்றதே சௌதாமினி எதிர் பார்த்த விஷயமாகையினால் அவளுக்கு இது விஷயத்தில் ஆச்சரியமோ, திகைப்போ உண்டாகவில்லை. ஆனால் நல்ல உத்தமமான ஹரிநாத்திற்கு இத்தகைய ஊழல் சனி யன் சம்பவித்து பேராபத்தும் அவமானமும் தேடி வைத்துவிட் டதே என்ற மனக் கலக்கம் மட்டும் வதைத்தது. என்ன செய்வாள் பாவம்!...''அம்மணீ! நானோ ஒரு கேவலமான நர்ஸ் தொழில் செய் கிறவள். எனக்கு டாக்டர்கள் இடும் வேலையை செவ்வனே செய்யத் தெரியாது. நான் இது விஷயத்தில் நேற்றே சந்தேகித்துத் தெரிந்துகொண்டேன். என்னைப்போலவே பெரிய டாக்டரும் தெரிந்துகொண்டிருப்பதாகவே நான் நினைக்கிறேன். அதோ...... காலோசை கேட்கிறது. அவரும் வந்துவிட்டார்'' என்றாள்.

அதே சமயம் பெரிய டாக்டரும் இவளுடைய தகப்பனாரும் ஒன்றாகவே வந்து சேர்ந்தார்கள். ஊர்மிளாவின் முகம் பிணம்போ லாகிவிட்டது. பெரிய டாக்டர் இத்தனை நாளைவிட அன்று நன்றாகத் தெரிந்துகொண்டார். ஹரிநாத்தும் ஓர் பெரிய டாக்டராகையால் அவர் ஊரில் இல்லாத சகல விஷயமும் இவருக்கும் தெரியும். ஆதலால் இது விபரீதம் என்று அவர் அறிந்துகொண்டார். இதை யாரிடம் எப்படிச் சொல்வது என்ற குழப்பம் அவரையும் பிடித்துக் கொண்டது. ஊருக்கே மகா பெரிய மனுஷராயும், செல்வாக்குள்ளவ ராயும் விளங்கும் பெரிய குடும்பத்து மனிதருக்கு இத்தகைய அவ

மானம் நேர்ந்துவிட்டதென்றால் அவர் சகிப்பாரோ மாட்டாரோ என்ற கவலையும் கூடிவிட்டதால் மவுனமாகவே டாக்டர் ஊர்மிளா! வின் தகப்பனரை யனுப்பிவிட்டு ஊர்மிளாவை உற்று நோக்கினர்.

ஊர்மிளா தன்னுடைய ரகஸியத்தை யறிந்துதான் தன்னைப் பார்ப்பதாகத் தெரிந்துகொண்டு விக்கி விக்கி அழ வாரம்பித்து விட்டாள். உடனே பெரிய டாக்டர் ஊர்மிளாவைத் தேற்றி "அம்மா! அழாதே. இது அழும் சமயமல்ல. எல்லாம் எனக்குத் தெரியும். நான் கவனித்துக்கொள்கிறேன். இந்த ஆபத்தும் அவமானமும் நேராதிருப்பதற்காகத்தான் பகவான் சில கட்டளைகளைக் காட்டியிருக்கிறர். அதை யனுசரித்துப் பெரியவர்கள் சில உயர்ந்த உன்னதமான பழக்க வழக்கங்களை ஏற்படுத்தி இருக்கிறர்கள். அவ்விரண்டையும் மதியாது ஸ்திரீகள் தமக்கிருக்கும் உண்மையான சுதந்திரத்தின் மகிமையை அறியாது அதை மீறிய விபரீத சுதந்தரத்தை வகிக்க முற்பட்டுவிட்டால் அதன் பலன் இதுதான். அது கொடுக்கும் முடிவு இதுதான். அதனல் கிடைப்பதாக நினைக்கும் சந்தோஷம் இதுதான்.

ஊம்...இந்த சமயம் உனக்கு நான் ப்ரஸங்கம் செய்வது அழகல்ல. இப்போது உன் தேகம் இருக்கும் நிலைமையில் இதை வெளிப்படுத்தாவிட்டால் பெரிய ஆபத்தாகிவிடும். ஆகையால் ஆஸ்பத்திரிக்கு உன்னைக் கொண்டுபோய்விட்டால் சரியாகிவிடும் என்று நினைக்கிறேன். சௌதாமினீ! இதை நீயும் வெளியிடாதே. சறுக்கி விழுந்துவிட்டவர்களைத் தூக்கி நிறுத்தி காப்பாற்றிப் பார்ப்போம். அதிலிருந்து திருந்திவிட்டால் சரி. இல்லையேல் அவரவர்களின் விதி'' என்று கூறினர்.

பின்னர் இரண்டு மாத காலமாகிவிட்டது. ஊர்மிளா சொஸ்தமாகி வீட்டில் பழயபடிபோலவே அட்டகாஸம் செய்ய வாரம்பித்து விட்டாள். இவளுடைய நல்லதிர்ஷ்டமோ, துரதிஷ்டமோ இவளுக்கு வைத்தியம் செய்த பெரிய வைத்தியர் திடீரென்று காலமாகிவிட்டதால் 'இந்த ரகஸியம் வெளி வருமாயின் இது சௌதாமினியினல் தான் வரவேண்டும்' ஆதலால் அவளால் இது வெளிவராதிருக்கும்படி ஏதாவது ஒரு உபாயம் செய்யவேண்டும்; என்று எண்ணி இருந்தாள்.

சௌதாமினியின் விரோதிகளாகிய நர்ஸ்களில் ஒருத்தி ஊர்மிளாவுக்குப் பழக்கமாகி இருந்தாள். அவள்தான் முதலில் ஏதோ மருந்தும் கொடுத்தவள். அவளிடம் இதைப்பற்றி பேசும்போது சௌதாமினியே தனக்கு நர்ஸாக இருந்தவள் என்று ஊர்மிளா கூறுகையில் அந்த நர்ஸ் ஏதோ பெரிய தீயை மிதித்துவிட்டவள்போல் துள்ளிக் குதித்து "என்ன! என்ன! சௌதாமினியா

உனக்கு நர்ஸாகவிருந்தாள்? ஐயயோ! உன் தலைக்கு தீம்பு வந்து விட்டதே. அவள் உனக்குப் பரம வைரியல்லவோ! அவளுக்கும் உன் புருஷனுக்கும் வெகு நாட்கள் முதல் சிநேகமாயிற்றே இதை ஊர் முற்றம் அறியுமே, நீ அறியாமலா அவளிடமே உன் ரகஸி யத்தைத் தெரிவித்து நீயே உனக்குத் தீயை வைத்துக்கொண்டாய்? அட அனியாயமே......இச் செய்தி இன்னேரம் உன் கணவனுக்கு எட்டிப்போயிருக்குமே.'' என்று அவள் கலகத்தீயை மூட்டுவதைக் கேட்டதும் ஊர்மிளாவின் தலையில் இடி இடித்ததுபோலாகி விட்டது.

ஊர்மிளா:—கோலாகலம்!.......நீ சொல்வது உண்மையாகவா ......என் புருஷனுக்கு அம்மாதிரி நடத்தையும் உண்டா!

கோகிலா:—சரிதான் போ! இது உலகமே அறிந்த விஷய மல்லவா! உன் புருஷனும் அவளும் கையைப் பிடித்துக்கொண்டு பேசும்போது நானும் குஞ்சம்மாளும் கண்ணால் பார்த்திருக்கிறோம். அத்தகைய எதிரியின் கையில் நீ அகப்பட்டுக்கொண்டு விட்டாயே! இனி எந்த சமயம் உனக்கு என்ன ஆபத்து நேருமோ! எந்த சமயம் என்ன நடக்குமோ எப்படி தெரியும்? அவளுடைய நடத்தையில் சந்தேகங் கொண்டல்லவோ பெரிய துரைசானி அவளைத் தள்ளி விட்டது. இந்த ரகஸ்யத்தை உன் புருஷனல்லவோ மூடிவைத்து அவளுக்குத் தனித்தொழில் செய்வதற்கு சிபார்சு கடிதம் வாங்கிக் கொடுத்துக் காப்பாற்றுகிறார். இது தெரியாதா! இப்போது சீமைக்குப் போனதற்குக் காரணம் என்ன தெரியுமா! ஏதோ படிப் பதற்காக என்று கூறியது மட்டுமல்ல. படித்துவிட்டு அங்கேயே தொழில் நடத்துவதற்கு ஏற்பாட்டை முன்கூட்டியே செய்து கொண்டு, பிறகு இவளையும் அங்கு கூடவே அழைத்துக்கொண்டு போய்விடப்போகிறாராம்....அத்தனை சொத்துகளும் சம்பாதிக்கும் பணமும் எல்லாம் இனிமேல் அவளுக்குத்தான் அதோடுமட்டு மில்லாது உன் ரகஸ்யத்தை வெளியாக்கி உன்னை அதோகதியாக்கி விடவும் வழி செய்துவிடுவார்கள்—என்று கோலாகலம் சொல்லக் கேட்கும்போதே, தன்னிடம் கணக்கற்ற குற்றமும் நாற்றக்குப்பை யும் நிறைந்திருப்பதை அடியோடு மறந்து, சௌதாமினியின்மீது பொறாமையுண்டாகி அவளை எப்படித் தொலைத்துவிடலாம் என்று வஞ் சகமாக வலை வீசவும் ஊர்மிளாவின் மனம் நாடியது. இந்த கலகத் தீயின் வேகம் எத்தனை தூரம் பிடித்துக்கொண்டு வாட்டுமோ! யார் கண்டது? உபகாரம் செய்தவர்களுக்கு உபத்திரவம் செய்வதுதான் தீயவர்களின் தர்மமாகும்போலும்.

---

## 14-வது அதிகாரம்.

### ஆனந்த செய்தி—ஆச்சரிய சம்பவம்

வெளிநாட்டுக்குப் படிக்கச் சென்ற ஹரிநாத் ஓர் பெரிய ஹோட்டலில் தனக்கென விடுதியொன்று அமைத்துக்கொண்டான். படிப்பின் மும்முரத்தையே முதன்மையாகக் கவனித்து வந்தாலுங்கூட சௌதாமினியையும், அவள் அருமையான காதலையும் அவனால் சற்றும் மறக்கவே முடியவில்லை. படிப்புக்காகச் சென்ற பல தென்னிந்தியப் பிள்ளைகள் அங்கு சிறிதும் ஒழுக்கமின்றி கேவலம் கெட்டுப்போய்விடும் நிலைமையை இவன் பார்க்கும்போது மிக்க பரிதாபமாயும், ஏன் இவர்கள் இப்படிக் கெட்டலையும்படி பெற்றோர்கள் விடுகிறார்கள் என்றும் எண்ணுவான். தனக்கு இம் மாதிரியான துர்க்குணங்களோ, சபல புத்தியோ தோன்றாமல் இருக்கவேண்டுமே என்று கடவுளை பிரார்த்தித்துக்கொண்டே இருப்பான்.

சௌதாமினியிடமிருந்து கடிதமே வருவது நின்றுபோய், தான் எழுதுவதையும் வேண்டாமென்று சொல்லிவிட்டதால் அதுவே ஓர் பெரிய வேதனையாகி மனம் உடைந்துபோய்விட்டது. தான் வந்த காரியத்தின் வெற்றியே தற்போது தனக்கு முக்யமாகையினால் எப்படியாவது இத் துயரங்களைச் சகித்துக்கொண்டு பரீக்ஷை தேறவதிலேயே முழு கவனத்தையும் செலுத்திவந்தான்.

ஆண்டவன் அருளால் பரீக்ஷையும் முடிந்தது. அதன் முடிவைத் தெரிந்துகொண்ட பின்னர் ஊருக்குத் திரும்புவது என்று இருந்தான் இவனுக்கு முதல் வகுப்பில் பரீக்ஷை தேறிவிட்டது என்ற செய்தி ப்ரைவேட்டாக ஒரு கனவானுக்குத் தெரிந்ததும் அதை அவருடைய புதல்வியிடம் தெரிவித்தார். அந்த சந்தோஷச் செய்தியைத் தானே தெரிவிக்கும் பொருட்டு அம் மங்கை மடவன்னம் வெகு உத்ஸாகத்துடன் ஒரு நாளும் இல்லாமல் திருநாளைப் போல் ஹரிநாத் ப்ரமிக்கும்படி அவன் அறையில் நுழைந்தாள். "குட் ஈவினிங் மிஸ்டர் ஹரிநாத்! உங்களுக்கு மிகவும் முக்யமான சந்தோஷச் செய்தியைக் கொண்டுவந்திருக்கிறேன். அதென்ன சொல்லுங்கள் பார்க்கலாம். அதற்காக எனக்கென்ன தருகிறீர்கள்?" என்று கேட்டுக்கொண்டே ஓராசனத்தில் அமர்ந்தாள்.

அந்த நங்கையினுடைய தைரியமும், பரபரப்பும் ஒருவிதமான வியப்பைக் கொடுத்தது எனினும், அவள் என்ன சமாச்சாரம் கொண்டு வந்திருக்கிறளோ! என்ற பெரிய ஆவலும் கூடவே உதயமாகியதால் அவனுக்குள்ள இயற்கையான சாந்தமும் மரியாதையும் நிரம்பிய குணத்துடன் "அம்மணீ! எனக்கு தற்போது சந்தோஷத்தை யளிக்கக்கூடியது எனது பரீக்ஷை முடிவுதான் என்று நினைக்றேன். அது உண்மையாயின் அதைத் தெரிவித்த தங்களுக்கு என்னுடைய ப்ரத்யேகமானதும் மனப்பூர்வமானதுமான வந்தனத்தை வெகு சந்தோஷத்துடன் அளிக்கிறேன். இதைத் தவிர வேறு என்ன [illegible] வேறு எதைக் கொடுத்தால்தான் இதற்கு ஈடாகும்?'' என்றான்.

183006

அந்த மாது:—ஓ! அப்படியா சொல்கிறீர்கள்? பரீக்ஷை தேறியது என்றது மட்டுமல்ல. இந்த பரீக்ஷைக்குச் சென்றவர்களில் முதன்மையாக பாஸ் செய்திருக்கிறவர்கள் நீங்கள். உங்களுக்கு மெடல்கூட கொடுக்கப்போவதாக அறிகிறேன். இத்தனை பெரிய விஷயத்தைக் கூறிய எனக்கு உமது சாதாரண வந்தனந்தானு? விலையிலாததும், மாற்றிலாததும் எவருக்கும் எளிதில் கிடைக்கத்தகாததுமான வேறு ஒன்றும் எனக்குக் கொடுக்கலாகாதா?'' என்று மெல்ல கூறிக்கொண்டே ஹரிநாத்தை நோக்கினாள்.

ஹரிநாத்திற்கு இப் பெண்மணி பேசுவது முற்றும் சாகஸ வார்த்தைகள் என்பது ஒரு புறம் தெரிவதற்குள், தனக்கு வெளி நாட்டிலும் முதன்மையாக பரீக்ஷை தேறி பதக்கமும் கிடைக்கப் போகிறதென்கிற அளப்பரிய சந்தோஷத்தைக் கேட்ட உடனே மெய்மறந்தான். தன்னை மறந்து அந்த ஆநந்தத்தை யனுபவிக்கையில் ஒருபுறம் தன் பெற்றோர்களின் உருவங்களும், மற்றொரு புறம் தன் அருமைக் காதலி சௌதாமினியின் எழிலே நிறைந்த உருவமும் தோன்றி இவனுடைய சந்தோஷத்தைச் சேதிப்பதுபோல் இன்பமும் துன்பமும் ஒன்முக உண்டாகியது. இந்த இன்பத்தை யப்படியே விழுங்க வரும் ஓர் பெரும் பூதம்போல் ஊர்மிளாவின் பிம்பமும் தெரியாமலில்லை. இத்தனை வித உணர்ச்சிகளினால் குழம்பிப்போய்விட்ட ஹரிநாத் அந்த பெண்ணுக்கு என்ன பதில் கூறுவதென்றோ அல்லது வேறு எதையோ நினைக்காமல் ஒரே நிலையில் தம்பித்துப்போய் உட்கார்ந்துவிட்டான். அப் பெண்மணி இவனுடைய அந்தரங்க ரகஸ்யங்களை யறியமாட்டாளாகையால் "ஏன் இந்த அபாரமான சந்தோஷச் செய்தியைக் கேட்ட உடனே தன்னை மீறி ஆநந்தப் படாமல், ஏதோ ஒரு மாதிரியாகிவிட்டானே என்ன காரணமிருக்கும்?'' என்ற பெரும் வியப்பும், கலவரமும் கொண்டு ஹரிநாத்தை நோக்கியபடியே "ஹரிநாத்! ஹரிநாத்!!'' என்று அழைத்தாள்.

PRINTED AT TATA PRESS & PUBLISHED BY
V. M. PARTHASARATHY, MADRAS.

# ஸ்ரீமதி வை. மு. கோதைநாயகி அம்மாள்
எழுதிய நாவல்கள்.

| 30 ரூபாய்க்கு 38 நாவல்கள். | முழு விலை | | 'ஜகன்மோகினி' சந்தாதாரர்களுக்கு குறைந்த விலை. | |
|---|---|---|---|---|
| | ரூ. | அ. | ரூ. | அ. |
| வைதேகி (2 பாகங்கள்) | 2 | 8 | 2 | 0 |
| ராதாமணி (2 பாகங்கள்) | 2 | 8 | 2 | 0 |
| சாருலோசனா (2 பாகங்கள்) | 2 | 8 | 2 | 0 |
| பத்மசுந்தரன் | 2 | 8 | 2 | 0 |
| காதலின் கனி | 2 | 8 | 2 | 0 |
| நவநீதகிருஷ்ணன் | 2 | 0 | 1 | 12 |
| ருக்மிணிகாந்தன் | 2 | 0 | 1 | 12 |
| சாமளநாதன் | 2 | 0 | 1 | 12 |
| தியாகக்கொடி | 2 | 0 | 1 | 12 |
| மங்களபாரதி | 2 | 0 | 1 | 12 |
| சண்பகவிஜயம் | 1 | 12 | 1 | 8 |
| கௌரீமுகுந்தன் | 1 | 12 | 1 | 8 |
| ஸாரமதி | 1 | 12 | 1 | 8 |
| சோதனையின் கொடுமை | 1 | 8 | 1 | 4 |
| பரிமளகேசவன் | 1 | 4 | 1 | 0 |
| உத்தமசீலன் | 1 | 4 | 1 | 0 |
| இன்பஜோதி | 1 | 4 | 1 | 0 |
| அநாதைப் பெண் | 1 | 4 | 1 | 0 |
| ராஜமோஹன் | 1 | 4 | 1 | 0 |
| சுகந்தபுஷ்பம் | 1 | 0 | 0 | 14 |
| கதம்பமாலை | 1 | 0 | 0 | 14 |
| சாந்தகுமாரி | 1 | 0 | 0 | 14 |
| கோபாலரத்னம் | 0 | 14 | 0 | 12 |
| புத்தியே புதையல் | 0 | 14 | 0 | 12 |
| பட்டமோ பட்டம் | 0 | 10 | 0 | 8 |
| நளினசேகரன் | 0 | 8 | 0 | 6 |
| வீரவஸந்தா | 0 | 8 | 0 | 6 |
| மூன்று வைரங்கள் | 0 | 8 | 0 | 6 |
| படாடோபத்தின் பரிபவம் | 0 | 8 | 0 | 6 |
| பிச்சைக்காரக் குடும்பம் | 0 | 8 | 0 | 6 |
| ஆனந்தஸாகர் | 0 | 8 | 0 | 6 |
| ப்ரேமப்ரபா | 0 | 8 | 0 | 6 |
| பக்ஷமாலிகா | 0 | 6 | | |
| ஜயஸஞ்சீவி | 0 | 4 | | |
| சுகுணபூஷணம் | 0 | 4 | | |
| அமருக்காரா | 0 | 4 | | |
| அன்பின் சிகரம் | 0 | 4 | | |
| ஸரஸமோஹன் | 0 | 4 | | |

"ஜகன்மோகினி" ஆபீஸ், 26, தேரடித் தெரு, திருவல்லிக்கேணி.



தலை வலிக்கு

# Headaches

ஆஸ்பிரினை விலக்குங்கள்

இருதயக் கோளாறுகளையும்

விலக்குங்கள்




அம்ருதாஞ்சனை

உபயோகியுங்கள்

எல்லா வலிகளையும், சுளுக்குகளையும்
சொஸ்தப்படுத்துகிறது.

அமிர்தாஞ்சன் டிபோ,

சென்னை கல்கத்தா பம்பாய்